விடுதலைப்புலிகள்

குரல் 97 மார்கழி — தை 2001 அன்பளிப்பு—5/—

## உள்ளே

☆ புலிகளின் போர்நிறுத்தம் சிங்கள அரசின் போர்வெறி
☆ நிழல் ஆக்கிரமிப்பு
☆ புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தம்
☆ நெருப்பெரித்த பெருநிலம்
☆ கரும்புலி மேஜர் சிற்றம்பலம்
☆ உலைக்களம்
☆ போரிடுங்கள் பேசுங்கள்

# போர் நிறுத்தத்தை சிங்கள அரசு நிராகரிக்க விரும்புவது ஏன்?

முதலில் செயற்படுத்திய ஒருமாதகால போர்நிறுத்தத்தை சிங்கள அரசு நிராகரித்த நிலையிலும் தமது போர்நிறுத்த நடவடிக்கையை மேலும் ஒருமாதத்திற்குத் தொடரப் போவதாக புலிகள் இயக்கம் அறிவித்துவிட்டது.

ஆயினும், போர்வெறி நிலைப்பாட்டிலிருந்து சிங்கள அரசு மாறுவதாகத் தெரியவில்லை. போர்நிறுத்தத்திற்கு உடன்படுவது பேரினவாத நலன்களுக்குத் தீங்கிழைக்கும் என்று சிங்கள அரசு கருதுகின்றது.

சிங்கள அரசைப் பொறுத்தவரை - தமிழினத்தின் தேசிய இனப்பிரச்சனைக்கு போர்மூலம் இராணுவத்தீர்வு காண்பதையே விரும்புகின்றது.

அமைதி வழியில் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணவேண்டிய சூழல் பிறந்தால், அது தமிழினத்தின் அரசியல் கோரிக்கைகளுக்குச் சார்பானதாக அமைந்துவிடும் என்று அஞ்சுகின்றது;

அதுவும், வெளிநாடொன்றின் மத்தியத்துவத்தின் கீழ் அமைதிப் பேச்சுக்கள் நடைபெறுமாயின் சிங்கள அரசு பாரிய சிக்கல்களில் மாட்டிக்கொள்ளும் என்றும் அது பயப்படுகின்றது.

அத்துடன், சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் அரசியல் இலட்சியமான 'இலங்கைத்தீவு சிங்களவர் பூமி' என்ற அதன் நீண்டகால அரசியல் நிலைப்பாட்டிற்கு குந்தகம் விளைந்துவிடும் என்றும் பீதியடைகின்றது.

அதே வேளை, நாட்டின் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றவும்-அதைத் தொடர்ந்து தக்கவைக்கவும் போரே கூலபமான மார்க்கமாகவும் சிங்களத்து அரசியலிலே காணப்படுகின்றது.

இவ்வகாரணமாகவே புலிகள் இயக்கத்தின் போர்நிறுத்த அழைப்பை சந்திரிகா அரசாங்கம் நிராகரித்துள்ளது.

ஈழத்தமிழர்களின் அரசியல் அபிலாசைகளாக தாயகம் - தேசியம் - தன்னாட்சி அமைந்துள்ளது. ஈழத்தமிழரின் பிறப்புரிமைகளான இந்த அரசியல் உரிமைகளை சிங்கள அரசு ஏற்கமறுக்கின்றது.

எனினும், இத்தகைய அரசியல் அபிலாசைகளுக்கு ஆதரவாக சர்வதேச உலகம் கருத்துக்கூறி வருகின்றது. இந்த அரசியல் கோரிக்கைகளுக்கு ஒரு தார்மீக நியாயம் இருப்பதாக அவை ஒப்புக்கொள்கின்றன.

இந்த நிலையில் போரை நிறுத்தி மூன்றாந்தரப்பு மத்தியத்துவத்தின் கீழ் புலிகளுடன் பேசமுயன்றால், பேச்சுவார்த்தை மேசையில், புலிகள் இயக்கத்தின் கை ஓங்கிவிடும் என சிங்கள அரசு அஞ்சுகின்றது.

ஆகவே, இத்தகைய தொரு 'ஆபத்தான' முயற்சியை தவிர்ப்பதற்காக பேச்சுவார்த்தைக்குச் செல்லாமல் போரைத் தொடர்வதிலேயே சிங்கள அரசு குறியாகவுள்ளது.

சிங்கள அரசு பேச்சுவார்த்தையை விரும்பவில்லை என்ற குற்றச்சாட்டு எழாமல் தவிர்ப்பதற்காக போர் புரிந்துகொண்டே பேச்சுவார்த்தை நடாத்த தான் தயார் என சிங்கள அரசு கூறுகின்றது. அமைதிப் பேச்சை சிதைக்கவும் - சர்வதேச சமூகத்தை ஏமாற்றவும் சிங்கள அரசு வகுக்க விரும்பும் தந்திர வியூகம் இதுவென்ற புலிகளின் கருத்தை சர்வதேச உலகமும் ஏற்றுக்கொள்கின்றது.

இனமோதல்களுக்குச் சரியான தீர்வாக தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து-பிரச்சனைக்கு நிரந்தரத்தீர்வு காணும் அரசியல் போக்கு, இன்று, சர்வதேச அரங்கில் பலமடைந்துள்ளது.

ஈழத்தமிழர்கள் இந்தத் தன்னாட்சி உரிமைக்கு உரித்துடையவர்கள் என்ற எண்ணம் சர்வதேச அரங்கில் குறிப்பாக மேற்குநாடுகளில் பரவிவருகின்றது.

தமிழர்கள் தமக்கே உரித்தான தாயகநிலப்பகுதியில் தனித்துவமான வரலாறுடன் மிக நீண்ட காலம்தொட்டு வாழ்ந்தபடி - தமிழ் மொழியைப் பேசி சிறப்பான பண்பாட்டைக் கடைப்பிடித்து - தனித்துவமான பொருளாதார வாழ்வுடன் வாழ்ந்து வருகின்றனர் என்ற உண்மையை சர்வதேசம் தெரிந்து வைத்திருக்கின்றது.

எனவே, பேச்சுவார்த்தையின் விளைவு என்பது தமிழர்களுக்கு தன்னாட்சி உரிமையை வழங்குவதிலேயே போய்முடியும் என்று சிங்கள அரசு கலங்குகின்றது

அவ்விதம் போவதைத் தவிர்ப்பதற்காக பேச்சை இடைநடுவில் முறித்தால் சர்வதேசத்தின் பகைமையைச் சம்பாதிக்கவேண்டிவரும் என்றும் சிங்கள அரசு அஞ்சுகின்றது.

அத்துடன் புலிகள் இயக்கத்திற்கு சர்வதேச அங்கீகாரத்தையும்-அதன் அரசியல் நிலைப்பாட்டிற்கு உலகநாடுகளின் ஆதரவையும் பெற்றுத்தந்துவிடும் என்றும் அது பயப்படுகின்றது.

அதேசமயம், பேச்சுமுறிவுக்கு, இனிமேல் புலிகள் இயக்கத்தின் மீது பழிபோட முடியாது என்றும் அது எண்ணுகின்றது.

போர் இல்லாமல் சமாதான சூழலில் பேச்சுவார்த்தை நடைபெறுமானால் சர்வதேச தொடர்புசாதனங்கள் சுலபமாக புலிகள் இயக்கத்தையும் - தமிழ் மக்களையும் அணுகும். அப்போது புலிகள் தமது ஆயுதப் போராட்டத்தின் அரசியல் வரலாற்றை எடுத்துவிளக்குவர். அதனால் தமிழினத்திற்கெதிராக சிங்கள அரசும் - அதன்படைகளும் இழைத்த அநீதிகள் - அழிவுகள் அம்பலமாகும். தமிழ்மக்களின் சோகக்கதைகள் சர்வதேசத்தின் இதயத்தைத்தொடும். சிங்கள அரசின் கோரமுகம் அம்பலமாகும். இவ்வகாரணமாக புலிகள் இயக்கத்

(02ம் பக்கம் பார்க்க)



தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# மிருசுவில் படுகொலை
# இனப்படுகொலையின் இன்னொரு காட்சி

படையினரின் ஆக்கிரமிப்பிற்குள் அகப்பட்டுள்ள மிருசுவில் படித்த மகளிர் குடியிருப்புப் பகுதியில் 19. 12. 2000 அன்று தமது வீடுகளைப் பார்க்கச்சென்ற எட்டுத்தமிழர்கள் படையினரால் கோரமாகக் கொல்லப்பட்டு - புதைக்கப்பட்டுள்ளனர்.

கூரிய ஆயுதத்தினால் குரல்வளை அறுக்கப்பட்டு அவர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டுள்ளனர். கொலைவலைக்குள்ளிருந்து சாதுரியமாகத் தப்பிக்கொண்ட இளைஞனொருவனால் (பொ. மகேஸ்வரன்) படையினரின் இப்படுகொலை அம்பலத்திற்கு வந்துள்ளது.

கொல்லப்பட்டவர்களுள் பாலர்களும் அடங்குகின்றனர். ஐந்து வயதுப்பாலகன் ஒருவன் (பிரசாந்) கால் எலும்பு முழங்காலுக்குக்கீழ் அறுந்து தொங்கிய நிலையில் புதைகுழியிலிருந்து சடலமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளான். அப்பாலகனின் கைகள் வயர் ஒன்றினால் பின்புறமாகக் கட்டப்பட்ட நிலையில் இருந்தது.

தாம் ஆக்கிரமித்த பகுதிகளில் மக்கள் குடியிருக்கவும் - வீடுகளைப் பார்வையிடவும் வரலாம் என அறிவித்து, மக்களைக் கொலைவலைக்குள் விழவைத்து இத்தகைய படுபாதகச் செயல்களைப் படையினர் புரிந்துள்ளனர்.

இவ்வாறுதான், படையினரின் கொலைவெறிக்கு அஞ்சி 1995 ஒக்டோபரில் வலிகாமத்தைவிட்டு இடம்பெயர்ந்தோடிய மக்களை மீளக் குடியிருக்க அழைத்த படையினர், வந்தவர்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோரை கொன்றொழித்தனர். இவர்களில் சிலரது சடலங்களை செம்மணியிலும், அரியாலையிலுமிருந்த புதைகுழிகளிலிருந்து கண்டெடுக்கப்பட்டன.

தமிழர்கள் என்ற காரணத்திற்காகமட்டும் தமிழ்மக்கள் கூட்டம் கூட்டமாக கொல்லப்பட்டும் - அவர்களது உடலங்களை கண்காணாதவகையில் புதைப்பதும் - எரித்தழிப்பதும் சிங்களப்படையினரதும் - சிங்களக்காடையர்களினதும் தொடர்செயற்பாடாகவுள்ளது.

1956 இல் தொடங்கிய இப்படுகொலை முயற்சி வரரைத திவிரமபெற்று இன்றுவரை தொடர்கின்றது.




இனவெறிப்பிடித்த நிலையில் சிங்களப்படையினரும் - காடையர்களும் புரியும் இந்தவெறியாட்டத்தில் குழந்தைகளும் - பெண்களும் - முதியோர்களும் - கர்ப்பிணிகளும் இரையாக்கப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு படுகொலைச் செயலிலும் கொலைஞர்கள் காட்டிவரும் கொலைப்பாணி நெஞ்சைப் பிழியத்தக்கது - இரத்தத்தை உறையவைக்கவல்லது.

கொதிக்கும் தார் பீப்பாக்குள் போடுவதிலிருந்து - உயிருடன் கொழுத்துவது - புதைப்பது - கண்களைத்தோண்டுவது - கண்டதுண்டமாக வெட்டிக்கொல்வது, சுண்டுவைத்துக் கொல்வது, குரல்வளை அறுத்துக்கொல்வது - பாலியல்வல்லுறவு கொண்டு கொல்வது என காட்டுமிராண்டித்தனமான வகையில் தமிழர்கள் திட்டமிட்டுப் படுகொலை செய்யப்படுகின்றனர்.

நிலத்தை அபகரிக்கவும் - இராணுவத்தோல்விகளுக்குப் பழிவாங்கவும் - பயமுறுத்திப் பணியவைக்கவும் என பல நோக்கங்களுடன் தமிழர்கள் இனக்கொலை செய்யப்படுகின்றனர்.

இவ்விதம் இனக்கொலைபுரியும் படையினரும் சிங்களக்காடையர்களும் சிங்கள அரசின் ஆசிர்வாதத்தையும், சட்டப் பாதுகாப்பையும், வெகுமதிகளையும் பெற்றுவருகின்றனர்.

காலத்திற்குக்காலம் இத்தகைய இனப்படுகொலைகளை ஆட்சியில் இருப்போரே தூண்டிவிட்டு நடாத்துகின்றனர். கொலையாளிகளை ஏவிவிட்டு தமிழர்களை இனப்படுகொலை புரிகின்றனர். படுகொலைகளுக்கு காரணங்களைக்கூறி அவற்றை நியாயப்படுத்தவும் முனைகின்றனர்.

இத்தகைய இனப்படுகொலையில் இன்றுவரை எண்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொன்றழிக்கப்பட்டுள்ளனர். ஈழத்தமிழரின் இனத்தொகையில் இதுவொரு கணிசமானபகுதி என்பது குறிப்பிடத்தக்கது.

குமுதினிப்படகில் 30 பேர், வந்தாறுமூலை பல்கலைக்கழகத்தில் 170 பேர், பிள்ளையாரடி - சத்துருக்கொண்டானில் 184 பேர், வெலிக்கடையில் 58 பேர், பிந்துனுவெவவில் 40 பேர், யாழ்ப்பாணத்தில் ,000 பேர் என தமிழர்களை கூட்டம் கூட்டமாகக் கொன்றவர்கள் எவரும் தண்டிக்கப்பட்டதாக வரலாறு இல்லை. படுகொலைகளுக்குக் காரணமான படையதிகாரிகள் பதவியுயர்வு பெற்றதற்கு வரலாறு உண்டு.

தமிழர்களை இனப்படுகொலை செய்து அவர்களது இருப்பை இலங்கைத்தீவில் இல்லாதுசெய்வது சிங்கள-பௌத்த பேரினவாதத்தின் குறுந்திட்டம். இந்த நயவஞ்சகத்திட்டத்தை சிங்கள அரசு தீவிரமாக நடைமுறைப்படுத்துகின்றது.

இந்நிலையில் இத்தகைய படுகொலைகளுக்கு நீதிவிசாரணை வேண்டுமென்றோ! குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டுமென்றோ சிங்கள அரசைக் கோருவது அர்த்தமற்றது.

சிங்களப்படைகளின் ஆக்கிரமிப்பிற்குள் தமிழர்கள் இருக்கும்வரை இத்தகைய படுகொலைகள் எதிர்பார்க்கக்கூடியதே. இக்கொலையை நோக்காகக்கொண்ட இப்படுகொலைகளைத் தடுக்க ஒரேவழி சிங்களப் படைகளை தமிழர் தாயகத்திலிருந்து அப்புறப்படுத்துவதுதான்.

O

(01 ம் பக்கத்தொடர்ச்சி)

## போர்நிறுத்தத்தை ——

தினது அரசியல் இலட்சியத்தின் நியாயப்பாடுகள் சர்வதேசத்திற்கும் தெரியவரும்.

இவற்றிற்குப் பதிலாக போர் தொடருமானால் அங்கீகரிக்கப்பட்ட அரசு என்ற சலுகையையும் - வசதியையும் சிங்கள அரசு உபயோகித்து தமிழர்களுக்கு எதிராக அது இழைக்கும் இன்னல்களை மறைக்கவும் புலிகளுக்கு அவப்பெயரை ஏற்படுத்தும்வகையில் பொய்களைப் புனையவும் - செய்திகளை தரித்துக் கூறவும் - உண்மைகளை மறைக்கவும் சிங்கள அரசுக்கு வாய்ப்பாக இருக்கும்.

போர்ச்செயற்பாட்டைக் காரணம் காட்டி சிறிலங்காவின் அபிவிருத்தி - வேலைவாய்ப்பு - வறுமை போன்ற ஏனைய பிரச்சனைகளை கிடப்பில் போட சிங்கள அரசுக்கு வாய்ப்புள்ளது. இதனால சிங்கள இளைஞர்களின உயிரழிவில் சுலபமாக அரசியல் செய்துகொண்டு - ஆட்சியதிகாரத்தையும அதனால் வரும் சலுகைகளையும் - வசதிகளையும் அனுபவித்தபடி ஆட்சிபுரியலாம் என்றும் சந்திரிகா அரசாங்கம் எண்ணுகிறது.

இதேவேளை, புலிகள் இராணுவரீதியாகப் பலமிழந்துவிட்டனர் என்றும், போர்க்களத்தில் சிங்களப் படைகளின் கையோங்கியுள்ளது என்றும் சிங்கள அரசு கணிக்கின்றது. எனவே, போரைத் தொடர்ந்து நடாத்தி புலிகளைப் பூண்டோடு அழித்துவிடலாம் என்றும் ஆசைப்படுகின்றது. புலிகளின் ஒவ்வொரு சமாதான நல்லெண்ணத்தையும் அவர்களின் பலவீனமாக விளங்கிக் கொள்வது சிங்களத்தின் வழமையாகும்.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு இராணுவ வழிமுறையில் தீர்வு காண்பதென்ற சிங்களப்பேரினவாதத்தின் நிலைப்பாடே சந்திரிகா அரசின் நிலைப்பாடாகும்.

போர்நிறுத்தம் - அமைதிப் பேச்சு என்பதெல்லாம் பேரினவாதத்தின் அரசியல் அபிலாசைகளுக்கு எதிரானது. எனவே புலிகளின் போர்நிறுத்த அழைப்பை ஏற்காது நிராகரிப்பதன்மூலம் போரைத் தொடர்ந்து நடாத்தி இனப்பிரச்சனைக்கு இராணுவத்தீர்வு காண விளைகின்றது.

O

## மலக்குழிக்குள் கைகால்கள் அடிக்கும் சத்தம், மேற்பரப்பில் ஒரே இரத்தம்

### மிருசுவில் புதைகுழி மரணவிசாரணையில் உயிர்தப்பிய பொ. மகேஸ்வரன் சாட்சியத்திலிருந்து ஒருபகுதி

*துவக்குப்பிடியினாலும். கொட்டனாலும் நாங்கள் இருக்க அடித்தனா எங்களை அடிக்கும்போது ஏதேதோ எல்லாம் சிங்களத்தில் சொன்னார்கள். எல் ரீ. ரீ. ஈ. என்று சொன்னது தான் எனக்கு விளங்கியது அவவேளையில் 'ஐயோ அடியாதையுங்கோ அடியாதையுங்கோ வழமையாக இங்கு வாறனாங்கள்'' ''இயந்திர் பிடுங்கித்தாறனாங்கள்'' என்று சொல்ல அடியாதையுங்கோ என் கத்தினேன் நான் குழறும்போது ஒரு ஆமி என்னை எழும்பச் சொல்ல எனது சாரத்தைக் கழற்றி கண்ணையும, வாயையும சோத்துக் கட்டினார். ஒற்றைக்கண் உள்ளவர்தான் எல்லோருக்கும் ஒடி ஒடி அடித்தார். அவர் தான் என் கண்ணையும வாயையும் கட்டியவர் ....*

*—.. என்னை குழியின் ஓரமாக நிறுத்தியிருந்தார்கள். அங்கு பார்த்தபோது குழியின் ஒருபக்க மூடி திறக்கப்பட்டு சற்று அக்கப்பட்டு நிலத்தில் வைக்கப்பட்டிருந்தது எனக்கு ஒரு பக்கத்தில கத்தியுடன் ஒரு ஆமியும் இன்னொரு பக்கத்தில் துவக்குடன் மற்ற ஆமியும் என்னைப் பிடித்துக் கொண்டு பின்னுக்கு ஒரு ஆமியும் நிற்பதை உணர்ந்தேன். அத்துடன் குழியின் மேலே இரத்தம் கறுப்பாக இருந்தது. அத்துடன் குழிக்குள் நீரில் கைகால்களை அடிக்கும சத்தம் கேட்டது. இதனை வைத்து குழிக்குள் ஆரையோ குத்தியோ வெட்டியோ போட்டிருப்பதாகக் கருதினேன்.*

*அந்நேரத்தில் கத்தியுடன் நின்ற ஆமி சிங்களத்தில் ஏதோ கூற என்னைப் பிடித்துக்கொண்டு பின்னால் நின்றிருந்த ஆமி எனது கண்களைக் கட்டினார் அச்சமடைந்தில் ஐயோ என்னைச் சாக்கொல்லப் போகிறார்கள் என எனது அம்மாவையும் கடவுளையும் நினைத்தேன். அத்துடன் இப்படிச்சவதை விட சுட்டுச் செத்தாலும் பரவாயில்லை என எண்ணி தப்பி ஓட நினைத்தேன். பிறகு எனது இரண்டு கைகளையும் கண்களைக் கட்டிய துணிக்கிடையில் வைத்து தள்ளியபோது கட்டியிருந்த துணி கீழே விழுந்தது. மலசலகூடக்குழிக்கும் கத்தியுடன் நின்ற ஆமிக்கும் இடையில் குழி ஓரமாக ஓடிச்சென்று அருகில் இருந்த கம்பிவேலி ஒன்றுக்கு ஊடாகப் புகுந்து தப்பி ஓடினேன்.*

வீரகேசரி 05 ஜனவரி 2001

O

# புலிகளின் போர்நிறுத்தம் - சிங்கள அரசின் போர்வெறி

## சர்வதேசத்தின் நோக்குநிலையில் மாற்றமேற்படுமா!

புலிகள் இயக்கம் அறிவித்த போர் நிறுத்தத்தை சிங்கள அரசு நிராகரித்துவிட்டது. எனினும், அறிவித்தபடி புலிகள் உண்மையாகவும் நேர்மையாகவும் போர் நிறுத்தத்தைக் கடைப்பிடித்து வருகின்றனர். நோர்வே அரசின் சமாதான முயற்சிக்கு உதவுவதுடன், சமாதான சூழலை உருவாக்குவதற்கான முன்முயற்சியாகவும் ஒருமாதகால போர் நிறுத்தத்தை புலிகள் இயக்கம் அறிவித்திருந்தது. உடனடியாகவே சர்வதேச நாடுகள் அதை வரவேற்று - புலிகளைப் பாராட்டியிருந்தன. ''இது அமைதியை நோக்கிச் செல்லத்தக்கது'' என பிரித்தானிய வெளிவிவகார அமைச்சு நம்பிக்கை தெரிவித்தது. நோர்வே அரசும் மகிழ்ச்சி தெரிவித்திருந்தது. பிரித்தானியாவின் பி. பி. சி. வானொலி, அமெரிக்காவின் சி. என். என். தொலைக்காட்சி உட்பட மேற்குலகின் தொடர்புசாதனங்கள் புலிகளின் போர்நிறுத்த அறிவிப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்து - செய்தியைப் பிரபலப்படுத்தின.

புலிகளின் போர்நிறுத்த அறிவிப்பிற்கு சிங்கள அரசு சாதகமாகப் பதிலளிக்கவேண்டும் என்ற சர்வதேசத்தின் எதிர்பார்ப்பு ஒரு சில நாட்களிலேயே சுக்குநூறாகியது. சிறிலங்காவின் பிரதமரும் - வெளிவிவகார அமைச்சரும் கூட்டாக அறிக்கை விடுத்து போர்நிறுத்தத்தை நிராகரித்தனர். சர்வதேச சமூகத்தின் கண்டனக்கணைகளைத் தவிர்க்கும் தந்திரோபாயத்துடன் முதலில் மௌனத்தைக் கடைப்பிடித்த ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் பின்னர் போர்நிறுத்தத்தை நிராகரித்தார்.

நோர்வேயின் சிறப்புத்தூதர் சொல்ஹெய்ம் நவம்பர் 1ம் திகதி தலைவர் பிரபாகரனைச் சந்தித்தார். அந்த சந்திப்பின்போது சமாதானத்தைக் காண்பதற்கான தனது நல்லெண்ணத்தை தலைவர் வெளிப்படுத்தியிருந்தார். நவம்பர் 27, மாவீரர் நாள் உரைமூலம் அமைதிக்கான தனது நல்லெண்ணத்தை மீண்டும் வலியுறுத்தியும் - சிங்கள அரசுடன் பேச்சுக்களைத் தொடர்வதற்கான முட்டுக்கட்டைகளை அகற்றி சமாதானப்பாதையைத் திறந்துவைத்தார். டிசம்பர் 24ம் திகதியிலிருந்து ஒருதலைப்பட்சமான போர்நிறுத்தத்தை ஒரு மாதத்திற்கு அறிவித்து - சமாதானத்திற்கான முன்முயற்சியைச் செயலிலும் காட்டியுள்ளார்.


தலைவர் பிரபாகரனைச் சந்தித்த சொல்ஹெய்ம் சந்திரிகா அம்மையாரையும் சந்தித்து தலைவர் பிரபாகரனின் சமாதான நல்லெண்ணத்திற்கு சாதகமாகப் பதிலளிக்கும்படி கேட்டிருந்தார். மேற்கு நாடுகளும் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும்படி சந்திரிகா அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்தன.

இலங்கைக்கு வழங்கப்படும் நிதியுதவியின் அளவிற்கும் - சிறிலங்கா அரசு எடுக்கவிருக்கும் சமாதான முயற்சிகளுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதாக பாரிசில் கூடியிருந்த இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டமைப்பும் சந்திரிகா அரசாங்கத்திற்கு உணர்த்தியிருந்தது.

தலைவரின் சமாதான அழைப்பிற்கு காத்திரமானவகையில் பதிலளிக்காமலே, உதவிவழங்கும் நாடுகளின் கூட்டமைப்பில் கலந்துகொள்ள, சந்திரிகா அம்மையார் தனது தலைமையில் ஒரு அமைச்சர்பட்டாளத்தையும் அதிகாரிகளைத் துக்கொண்டு பாரிஸ் சென்றார்.

அம்மையாரின் வழமையான உசுட்டலைச் சமாதானப்பேச்சு, இம்முறை, பாரிஸ்மாநாட்டில் எடுபடவில்லை. மாறாக அவரது அரசாங்கமும் - அதன் ஆட்சியும் பலத்த கண்டனத்திற்கும் - அதிருப்திக்கும் உள்ளாகியது. பிந்துனுவெவ சிறைப்படுகொலைக்காகவும் - சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கத்தவறியதற்கும் அம்மையாரின் அரசாங்கம் கடும் கண்டனத்திற்குள்ளானது. பொருளாதாரத்தடை உட்பட தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமைமீறல் - ஜனநாயக உரிமைமறுப்பு என்பவற்றிற்காகவும் அரசாங்கம் கண்டனத்திற்குள்ளானது. அத்துடன நடந்துமுடிந்த தேர்தலில் அரசசார்பில் நடந்த மோசடிகளும் - தேர்தல் தில்லுமுல்லுகளும் - இந்த முறைகேடுகளுக்குப் பொறுப்பான அரசியல்வாதிகளுக்கு புதிய அரசாங்கத்தில் வழங்கப்பட்ட முக்கிய பதவிகளை சுட்டிக்காட்டி தமது அதிருப்தியையும் மாநாடு தெரிவித்தது என கொழும்பு பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டிருந்தன.

இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு தகுந்தபதில சந்திரிகா அம்மையாரின் தலைமையிலான சிறிலங்கா பிரதிநிதிகளிடமிருந்து கிடைக்காததினால் வழங்கப்படவேண்டிய நிதி பற்றி அறிவிக்காமலே மாநாடு மொட்டையாக முடிவடைந்தது. வழங்கப்படவிருக்கின்ற நிதியின் அளவு பற்றியோ அல்லது அதற்கான நிபந்தனைகளோ பகிரங்கமாகவில்லை. பதிலாக சில ஊகங்களே வெளியாகியுள்ளது. நிதியுதவி குறைந்தளவில் வழங்கப்பட்டுள்ளது என்றும் சமாதான முன்னெடுப்புக்களின் படிநிலைகளைப்பொறுத்து நிதியுதவி கட்டங் கட்டமாக வழங்கப்படும் என்றும் ஊகங்கள் கூறப்படுகின்றன. எனினும், உதவிவழங்கும் நாடுகளின் அவதானிப்பாளர் குழுவொன்று இலங்கைவந்து நிலமைகளை அறிந்து - அறிக்கை சமர்ப்பித்த பின்னரே நிதியுதவி பற்றிய உத்தியோகபூர்வ முடிவு தெரிய வரும் என செய்திகள் தெரிவிக்கின்றன.



பாரிஸ் மாநாடு சிறிலங்கா அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் தோல்வியில் முடிவடைந்துவிட்டது என்பதே பொதுவான கருத்தாகும்.

நிலைமை இவ்வாறிருக்கும் போது சர்வதேசநாடுகளை ஆச்சரியப்படுத்தும் வகையில், தலைவர் பிரபாகரன் அவர்கள், ஒருமாதகால போர் நிறுத்த அறிவிப்பை ஒருதலைப்பட்சமாக விதித்தார். இந்த முயற்சியை சமாதானத்திற்கான ஆக்கபூர்வ நடவடிக்கை என சர்வதேச சமூகம் பாராட்டியது. போர்நிறுத்த அறிவிப்பை சிங்கள அரசு நிராகரித்த பின்னரும் புலிகள் இயக்கம் போர்நிறுத்தத்தைக் கடைப்பிடிக்க எடுத்த முடிவு சர்வதேச உலகிற்கு வியப்பையும் - மகிழ்ச்சியையும் கொடுத்துள்ளது.

அமைதிப் பேச்சுவார்த்தைக்கும் - அரசியல் வழிமுறையில் இனப்பிரச்சனைக்கான தீர்வு முயற்சிக்கும் புலிகள் இயக்கம் எதிரானது என்றே சிங்கள அரசு இதுவரைகாலமும் பரப்புரை செய்தது. ஆனால், இரு தரப்பாருக்கும் இடையேயான அமைதிப்பேச்சிற்கு மூன்றாந்தரப்பு மத்தியஸ்துவம் தேவை என புலிகள் அரசியல் நிலைப்பாடெடுத்தபோது சிங்கள அரசின் அரசியல் சாணக்கியம் நிலைதடுமாறத்தொடங்கியது.

புலிகள் இயக்கம் கோரியபடி மத்தியஸ்துவப்பாத்திரத்தை நோர்வே வகிக்கத்தொடங்கியதும் அமைதிப் பேச்சுக்கான ஆக்கபூர்வ நடவடிக்கைகளில் புலிகள் இயக்கம் ஈடுபடத்தொடங்கியது. இப்போது ஒருதலைப்பட்சமாக யுத்தநிறுத்த அறிவிப்பை செய்ததுடன் - இதற்குச் சாதகமாக சிங்கள அரசு பதிலளித்தால் இதை மேலும் நீடிக்கத் தயாராக இருப்பதாகவும் புலிகள் இயக்கம் அறிவித்துள்ளது.

சமாதானத்தை நோக்கிய பயணத்தில் இவ்வாறுதான் ஒருதலைப்பட்சமாக புலிகள் இயக்கம் இனி என்ன செய்யமுடியும்?

புலிகளின் போர்நிறுத்த அறிவிப்பை சிங்கள அரசு நிராகரித்தது மட்டுமல்ல, போரைத் தொடரப்போவதாகவும் - புலிகள் ஒடுக்கப்படும் வரை போர் தொடரும் எனவும் சிங்கள அரசு வலியுறுத்திக் கூறி வருகின்றது.

சமாதானமுகமூடியுடன் இதுவரை காலமும் உலகை வலம்வந்துகொண்டிருந்த சிங்களத்தின் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரும் போர் முரசு கொட்டிவருகின்றார்.

புலிகள் இயக்கம் சமாதானப் பேச்சிற்குத் தயாராகியபின்னரும் சந்திரிகா அம்மையார் தனது 'சமாதானத்திற்கான போரை' தொடரும் திடசங்கற்பத்துடன் உள்ளார்.

போரை நிறுத்தி சமாதானத்தை நிலைநாட்டல் என்ற விடயத்தில் பந்து இப்போது சிங்கள அரசின் பக்கமே உள்ளது என்பது அனைவரதும் கருத்து.

இலங்கைத்தீவில் இரத்தக்களரியுடன் நடைபெறும் இப்போரை முடிவுக்குக்கொண்டுவந்து - இங்கே அமைதியை நிலைநாட்டத் தடையாகவுள்ளது சிறிலங்கா அரசா! விடுதலைப் புலிகள் இயக்கமா! என்பதை பகிரங்கமாகக் கூறும் கடப்பாடுடன் சர்வதேசநாடுகள் இன்றுள்ளன.

சிங்கள அரசின் போர் இயந்திரத்திற்கு தீனியிட்டு - அதன் போர்க்கொள்கையைப் பேணுவதற்கு ஏதுவாக உலகநாடுகள் செலவற்றின் நிதியுதவியும் - ஆயுத உதவியும் தான் அடிப்படையாகவுள்ளது என்பது அனைவரும் ஏற்றுக்கொள்ளும் பொது உண்மை.

இந்தச் சர்வதேச உதவி சிங்கள அரசுக்குக் கிடைக்காது போகுமாயின் அதனால் தனது போர்க்கொள்கையைத் தொடரமுடியாது.

(11ம் பக்கம் பார்க்க)

— எல்லாளன் —

# நிழல் ஆக்கிரமிப்பு

ஓயாத அலைகள் நடவடிக்கைகள் மூலம் ஆக்கிரமிப்பாளரிடமிருந்து மீட்கப்பட்ட பிரதேசங்களில் இராணுவத்தின் நேரடி ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட நிலையில் இன்று மக்களின் மீள்குடியேற்றத்திற்கு சவாலாக எழுந்து நிற்கிறது இராணுவம் மக்களின் வாழ்விடங்களில் புதைத்து விட்டுச் சென்ற மிதிவெடிகளினதும், சூழ்ச்சிப் பொறிகளினதுமான வெடிபொருட்கள் ஆக்கிரமிப்பு.

பல்லாயிரக் கணக்காக வன்னியின் நிலப்பகுதியெங்கும் புதையுண்டு கிடக்கும் வெடிபொருட்களினால் உணரப்படும் அபாயம் மிகப் பெரியது இறப்புக்களையும், அங்கவீனங்களையும் ஏற்படுத்தும் இவற்றின் தாக்கத்திற்கும் அப்பால் எமது சமுதாயத்தில் குறிப்பாக மீள்குடியேறும் மக்களின் மத்தியில் இவை ஏற்படுத்தும் உளவியல் ரீதியிலான தாக்கமும். கொல்லப்பட்ட, அங்கவீனமடைந்தோரின் குடும்பத்தில் ஏற்பட்டுள்ள சுமை மிகுந்த வாழ்வும் குடும்பத்தின் உழைப்பாளர்களை இழந்துவிட்டு நட்டாந்தெருவில் நிற்கும் மக்களின் பரிதவிப்பும் காலத்தால் நீளுவதால் எதிரி ஏற்படுத்திய இவ் வெடிபொருள் ஆக்கிரமிப்பின் கனபரிமாணத்தை அதன் விளைவுகளோடு விளக்குவதாய் உள்ளது.

இராணுவம் கைப்பற்றிய பகுதிகளில் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதாக, மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதாக இயல்பு வாழ்விற்கான ஏதுநிலை தோற்றுவிக்கப்படுவதாக அரசு பிரச்சாரப்படுத்துகின்றது. அங்கெல்லாம் தனது இராணுவம் புதைத்துவிட்ட கண்ணிவெடிகளைக் கூட பெரும் பொருளாதார செலவினங்களுடன், ஆட்பல மற்றும் உயர் தொழில்நுட்ப கருவிகளைக் கொண்டு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் (UNDP)போன்ற சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் துணையுடன் அகற்றுவதாக அரசு காட்டுகின்றது. ஆனால் அரச படைகளால ஆக்கிரமிக்கப்பட்டு பின் புலிகளால் மீட்கப்பட்டுவிட்ட எம் மக்களின் பூர்வீக நிலங்களில் ஸ்ரீலங்கா இராணுவம் பெருமளவான நிலக் கண்ணிவெடிகளைப் புதைத்துவிட்டுச் சென்றுள்ளது மீட்கப்பட்ட எம் தாயக பூமியில் பிரதான நகரங்கள், வீதிகள், உற்பத்தி நிலயங்கள் எல்லாம் கண்ணிவெடிகளால் சூழப்பட்ட நிலையில் அங்கே எம் மக்கள் மீளக் குடியேற ஏதுவாக சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் தானும் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபடுவதற்கு அரசு அனுமதி மறுத்துள்ளது. ஸ்ரீலங்கா அரசு ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ நாடாக இருந்துங்கூட அந்நிறுவனத்தின 'கண்ணிவெடிகள் தடை' பற்றிய தீர்மானங்களை உதாசீனப்படுத்தி வருகின்றது.


வன்னிப் பெருநிலப்பரப்பின் பெரும்பான்மைப் பிரதேசங்கள் இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட நிலையில் ''மக்களை காப்பதற்காக யுத்தம்'' செய்யவந்த படையினர் திட்டமிட்டு விதைத்துவிட்டுச் சென்ற மிதிவெடிகளும், சூழ்ச்சிப் பொறிகளும் தொடர்ந்தும் எம்மக்களின் உயிர்களைப் பறிக்கின்றன. தம் சொந்த நிலங்களில் மீள் குடியேறத் துடிக்கும் மக்களிற்கு அரசு கொடுக்கும் நிவாரணம் அல்லது புனர்வாழ்வு - புனர்நிர்மான உதவி மரணங்களும், அங்கவீனங்களும் மட்டுந்தான்.

கடந்த 1998 தொடக்கம் 2000 புரட்டாதி வரையிலான வன்னியின் வைத்தியசாலைக் கணக்கெடுப்புக்களின்படி ஸ்ரீலங்கா அரச படைகளின் மிதிவெடிகளிலும் பொறிவெடிகளிலும் அகப்பட்டு 20 ற்கும் மேற்பட்ட எம்மக்கள் பரிதாபகரமாக கொல்லப்பட்டுள்ளனர். 175 ற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் இவர்களில் பெரும்பாலானோர் ஒரு காலையேனும் இழந்த நிலையில் அங்கவீனமாகியுள்ளனர் என்கிறது 'வெண்புறா' நிறுவன அறிக்கை. ஆக்கிரமிப்பு இராணுவத்தின் வெளியேற்றத்தின் பின்னால் ஏற்பட்ட வெடிபொருட்களின் அச்சுறுத்தலால் எம்மக்கள் அனுபவித்த அவலங்களின் நேரடிசாட்சியங்களே இவை.

அப்பாவி மக்கள் கொல்லப்படுவதை, அங்கவீனமடைவதையிட்டு பாராமுகமாக இருக்கும் அரசு அங்கவீனமானவர்களுக்குத்தானும் மருத்துவ வசதிகள் வந்தடைவதைத் தடை செய்து இறுக்கமான மருத்துவ தடை, மருந்துப் பொருட்கள் வெட்டு என மக்களின் மீதான வாழ்வியல் அழுத்தங்களை உயர்த்திச் செல்கின்றது.

இந்நிலையில் கண்ணிவெடிகளால ஏற்படுத்தப்படும் விபத்துக்களைத் தடுக்கும் பொருட்டு சர்வதேச தமிழர் சமூகத்தின் ஆதரவுடன் இயங்கிவரும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பங்காளி நிறுவனமான வெண்புறா நிறுவனம் முன்னெடுத்து வரும் செயற்திட்டங்கள் மீள்குடியேறத் துடிக்கும் எம் மக்களின் மனங்களில் புதிய நம்பிக்கையைத் தோற்றுவித்திருக்கின்றது. இரண்டாயிரமாம் ஆண்டின் முதலிரண்டு காலாண்டுகளையும் கண்ணிவெடிகளிற்கெதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தும் காலப்பகுதியாக வரித்துக்கொண்ட வெண்புறா நிறுவனம், சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் ஆதரவுடன் கட்டங்கட்டமாக ''கண்ணிவெடி விழிப்புணர்வு'' தொடர்பான பணிகளை வன்னிவாழ் மக்களின் மத்தியில் முன்னெடுக்கத் தொடங்கியது.

முதற்கட்டமாக கண்ணிவெடி விழிப்புணர்வு பற்றிய வகுப்புக்கள் சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் உதவியுடன் வெண்புறா கண்ணிவெடி விழிப்புணர்வு போதனாசிரியர்களுக்கு வழங்கப்பட்டு பின் அவர்கள் மூலம் வன்னிப் பிரதேசம் எங்கும் பாடசாலைகள், அரச திணைக்களங்கள், பொது அமைப்புக்கள் மக்கள் குடியேற்றங்கள் என விரிவாக்கப்பட்டன இருநூற்றுக்கும் மேற்பட்ட வெண்புறா கண்ணிவெடி விழிப்புணர்வு போதனாசிரியர்களால் பயிற்றுவிக்கப்பட்ட பலநூற்றுக் கணக்கானவர்கள் தாம் சார்ந்திருந்த கிராம, நிறுவன அமைப்புக்களின் ரீதியில் கண்ணிவெடி விழிப்புணர்வுப் பரச்சாரங்களில் ஈடுபட்டனர்.



மிதிவெடி

இவற்றின் தொடர்ச்சியாக இரண்டாம கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன வன்னிப் பெருநிலப்பரப்பெங்கும் 2000ம் ஆண்டின் ஆனி 18 தொடக்கம் ஆனி 24 வரை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் வெண்புறா நிறுவனத்தால் கண்ணிவெடி விழிப்புணர்வுவாரமாக பிரகடனப்படுத்தப்பட்டது இக்காலப்பகுதியில் ''கண்ணிவெடி விழிப்புணர்வு விரிவாக்கற் பணிகள்'' ஆரம்பமாகின.

இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட பகுதிகளில் இனங்காணப்பட் ''கண்ணிவெடி வயல்கள்'' என சந்தேகிக்கும் பிரதேசங்கள் அபாயப் பிரதேசங்களாக இனங்காட்டப்பட்டன இவற்றின் மூலம் கண்ணிவெடி அபாயப் பிரதேசங்களில் மக்களின் நடமாட்டம் தவிர்க்கப்பட்டது. மக்கள் மீள் குடியேறும் இடங்களில் கண்ணிவெடி அபாயம் குறித்த எச்சரிக்கைப் பலகைகள், அறிவுறுத்தற் சுவரொட்டிகள் என்பன ஏற்படுத்தப்பட்டன மக்கள் கண்ணிவெடி பற்றிய எச்சரிக்கை உணர்வுடையவர்களாக மாற்றப்பட்டனர் வன்னிப் பெருநிலப் பரப்பெங்கும் உள்ள பாடசாலைகளுக்கு வெடிபொருட்களின் மாதிரிகள் வழங்கப்பட்டன இவற்றின் மூலம் மாணவர்களுக்கு குறிப்பாக சிறுவர்களுக்கு வெடிபொருட்களை இனங்காணும் தன்மை உருவாக்கப்பட்டதுடன், அவற்றைக்காணும் போது மேற்கொள்ளவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் விளங்கப்படுத்தப்பட்டன இவ்வாறு வன்னி மக்கள் தம் வாழ்நிலம் முழுவிய நிலையில் வெண்புறா நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்ட கண்ணிவெடி விழிப்புணர்வு செயற்பாடுகளில் பங்கெடுத்தனர்.

இறுதியாக நிலக்கண்ணிவெடிகளை அகற்றுதல் செயலிழக்கச் செய்தல் தொடர்பான செயற்திட்டங்கள் ஆரம்பமாகின ஸ்ரீலங்கா அரசு வன்னியில் மக்களின் வாழிடங்களில் புதைக்கப்பட்ட நிலக் கண்ணிகளை அகற்றுவதற்கான அனுமதியை மறுத்தது சர்வதேச தொண்டர் நிறுவனங்களோ கண்ணிவெடி அகற்றும் பணியில் தாம் எதுவுமே செய்யமுடியாதென கை விரித்தன இந்நிலையில் கண்ணிவெடி விபத்துக்களைத் தவிர்த்து, மக்களை மீள்குடியேற்றம் செய்ய ஏதுவான சூழலை ஏற்படுத்தும் பொருட்டு விடுதலைப் புலிகளின் நிபுணத்துவம் சார் வழிகாட்டலுடன் வெண்புறா நிறுவனத்தின் ''கண்ணிவெடி அகற்றும் பணியாளர் குழு'' (Demining group) உருவாக்கம் பெற்றது.


தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முற்றான நிதி அனுசரணையுடன் வெண்புறா நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்ட கண்ணிவெடி அகற்றும் பணி இரண்டாயிரமாம் ஆண்டின் நடுப்பகுதி தொடக்கம் வன்னிப் பெருநிலப்பரப்பெங்கும் விரிவுபடுத்தப்பட்டது.

யாழ்குடா உள்ளிட்ட இராணுவ ஆக்கிரமிப்பு பிரதேசங்களில் பெரும் தொகையான பொருளாதார செலவுடன் உயர் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும் நிலையிலும் மீட்கப்பட முடிந்த கண்ணிவெடிகளது அளவு மிக அற்பமாகவே இருந்த நிலையில், மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன் மிகக் குறைந்த ஆட்பலத்துடன் செயற்பட்ட வெண்புறா கண்ணிவெடி அகற்றும் பணியாளர்கள் குறுகிய காலப்பகுதியில் ஏராளமான பிரதேசங்களை எதிரியின் வெடிபொருள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டனர்.


— அன்புமாறன் —

கடந்த ஆறுமாதங்களில் மட்டும் 72,000 ற்கும் மேற்பட்ட மிதிவெடிகளை, 3500 ற்கும் மேற்பட்ட எறிகணைகளை, 13 ற்கும் மேற்பட்ட வாகன எதிர்ப்பு கண்ணிவெடிகளை மற்றும் பலவித சூழ்ச்சிப் பொறிவெடிகள் உள்ளிட்ட வெடிபொருட்களை இராணுவத்திடமிருந்து வெற்றிகொள்ளப்பட்ட பிரதேசங்களில் இருந்து அகற்றினர். இதன்மூலம் மக்கள் அப்பிரதேசங்களில் மீளகுடியேற்றஞ் செய்வதற்கு சாத்தியமானதொரு புறச்சூழலைத் தோற்றுவித்தனர்.

(11ம் பக்கம் பார்க்க)



கைக்குண்டு



எறிகணை

# புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தம்:
# நல்லெண்ணமும் நயவஞ்சகமும்

சர்வதேச அரங்கில் விடுதலைப் புலிகளை சமாதான வழிமுறைக்கு எதிரானவர்களாகவும், யுத்தமோகம் கொண்டவர்களாகவும், சமாதானத்தை அடைவதற்கு தடைச்சக்தியென்றும் பிரச்சாரப்படுத்திவந்த சந்திரிகா அரசின் அகமுகம், அது அளிக்கும் வியாக்கியானங்களுக்கு அப்பால் உறுதியான தளத்தில் அம்பலப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பும், அரசு அதனை உடனடியாக கையாண்ட விதமும் இதனைப் பட்டவர்த்தனமாக நிரூபித்துள்ளது.


சந்திரிகா அரசு தனது ஆட்சிக்காலத்தில் விடுதலைப் புலிகளை சர்வதேச மட்டத்தில் அரசியல் ரீதியாகத் தனிமைப்படுத்துவதென்பதில் மிகத் தீவிரமாக இயங்கிவந்தது. அதில் அரசு முன்னேற்றம் கண்டுவந்ததாகவே நம்பப்பட்டது. அரசின் இம்முயற்சிக்கு "விடுதலைப் புலிகள் சமாதான விரும்பிகளல்ல. சமாதானம் மூலம் தமிழரின் பிரச்சனை தீர்க்கப்படுவதை அவர்கள் விரும்பவில்லை. யுத்தத்தை நிறுத்தவோ, நிபந்தனையற்ற பேச்சுக்களில் ஈடுபடவோ அவர்கள் தயாரில்லை. இவர்களே சமாதானத் தீர்வுக்கான தடையாக உள்ளனர். எனவே சமாதானத்தை நிலைநாட்ட இவர்கள் மீதான யுத்தம் அவசியமானது அதுவே சமாதானத்திற்கான யுத்தம்" என தனது யுத்தவாத கொள்கைக்கு அபத்தமான தர்க்கீக விளக்கமளித்திருந்தது அரசு. இதன் மூலம் தமிழ் மக்கள் மீதான இராணுவ மேலாதிக்கத்திற்கு "சமாதானத்திற்கான யுத்தம்" என்ற நியாயப்பாட்டையும், அதற்கான சர்வதேச ஆதரவையும், உதவியையும் பெற்று வந்தது சந்திரிகா அரசாங்கம்.

தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களால் வழிநடத்தப்பட்ட ஓயாத அலைகள் — 03 வெற்றியின் பிற்பாடு, விடுதலைப் புலிகளை வெற்றிகொள்ள இராணுவத்தால் முடியப்போவதில்லை என்ற யதார்த்தம் சர்வதேசத்தினால் விளங்கப்பட்டது. அதன் பின்னான அரசியற் சூழலில் ஐரோப்பிய ஒன்றியமும், மேற்கு நாடுகளும் இருதரப்பையும் சமாதான முயற்சியிலீடுபடுமாறு அழைப்பு விடுத்தன; நோர்வேயின் சமாதான முயற்சியில், அதன் விசேட பிரதிநிதியான எரிக் சொல்ஹெய்ம ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா, தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் ஆகிய இருதரப்புத் தலைவர்களையும் சந்தித்து அவர்களின் நிலைப்பாடு தொடர்பாக பேச்சு நடாத்தினார். தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் எமது நிலைப்பாடு தொடர்பாக நோர்வே பிரதிநிதிக்கு எடுத்து விளக்கப்பட்டதோடு, தனது மாவீரர் நாள் உரையில் ஒரு இயல்புச் சூழலில், நல்லெண்ணப்புறநிலையில், நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையில் ஈடுபட நாம் தயாரென அழைப்பும் விடுத்திருந்தார்.

சமாதானத் தீர்வில் ஆர்வங்கொண்ட அனைத்துத் தரப்பினரையும் இது நம்பிக்கைகொள்ள வைத்திருந்தது. விடுதலைப் புலிகளின் இவ்வறிவிப்பு திருப்தியளிப்பதாக சமாதான ஆர்வலர்கள் அறிக்கை விடுத்திருந்தனர். ஆனால், அரசு இவ்வறிவிப்பிற்கு ஆக்கபூர்வமான பதில் நடவடிக்கை எடுப்பதை விடுத்து குழப்பியடிப்பதிலேயே முனைப்புக்காட்டியது; விடுதலைப் புலிகளின் அறிவிப்பில் தமக்கு குழப்பம் இருப்பதாக அது குட்டையைக் குழப்பியது. அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களும், தலைவர்களும் ஒன்றுக்கொன்று முரணான நிலைப்பாடுகளையே வெளிப்படுத்தினர். சமாதானம் பற்றிய பேச்சுக்களும் முயற்சிகளும்

— கவியழகன் —

நோர்வே அரசின் ஈடுபாட்டுடன் நிகழும் இக்காலப்பகுதியில் அரச தரப்போ தமிழ் மக்களை அச்சுறுத்துவதான நடவடிக்கையில் ஈடுபட்டது. புனர்வாழ்வு முகாமான பிந்துனுவெவ படுகொலை சிங்களத்தின் நீண்டநாள் ஆயத்தப்படுத்தலாகவும், திட்டமிட்ட ரீதியிலும், சிறை அதிகாரிகளே சம்பந்தப்பட்ட வகையிலும் ஆயிரக்கணக்கானோர் பங்கெடுத்ததாகவும் நிகழ்ந்தது. தொடர்ந்து கடற்படையினரால 21 - 11 - 2000ம் அன்று திருகோணமலை கோபாலபுரத்தில் நிகழ்ந்த படுகொலையும், படுகொலையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்த நபர்கள் மீதான 13 - 12 - 2000ம் அன்றைய படுகொலையும், அதன்பின் மிருசுவிலில் புதைக்கப்பட்ட பெண்ணின் சடலம் இனங்காணப்பட்டதும், அதை எடுக்க முயன்றவர்களை இராணுவ அதிகாரிகள் உட்பட்ட படையினர் படுகொலைசெய்து புதைத்ததுமாக அரசின் படுகொலை இக்காலப்பகுதியில் விரிவடைந்தது. இயல்புச் சூழல் ஒன்றை ஏற்படுத்தாது பிரச்சனையின் அடிப்படைகள் பற்றிய பேச்சுவார்த்தையில் ஈடுபட முடியும் எனக்கூறும் அரசினுடைய சமரசப் பேச்சுக்கான நல்லெண்ணப்புறநிலையாக, பரஸ்பர நம்பிக்கையைக் கட்டிவளர்ப்பதாக இச்செயற்பாடுகளே - இவைமட்டுமே வெளிக்கிளம்புகின்றன.



நோர்வே பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் வன்னியில் தமிழீழத் தேசியத் தலைவரைச் சந்தித்தபோது, போர் நெருக்கடி தளர்ந்து இயல்புநிலை தோன்றுவதற்கு இருதரப்பிலிருந்தும் நம்பிக்கையை வளர்க்கும் நல்லெண்ண நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென சில யோசனைகளைத் தெரிவித்திருந்தார்; "இதனை நாம் ஆர்வமாகப் பரிசீலனை செய்துவருகிறோம்" எனக்கூறிய தலைவர் அவர்கள் "அதற்கான முன்முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமானால் பதிலாக நாமும் நல்ல முடிவுகளை எடுப்போம்" எனத் தெரிவித்திருந்தார்; ஆனால் அரச தரப்பிடமிருந்து வெளிப்படும் செயல்பூர்வமான சமிக்கைகள் கசப்பான அலைகளையே உருவாக்குவதாயுள்ளன.

ஆயினும், சமாதான வழிமுறைக்கு நாம் எதிரானவர்களல்ல என்பதையும் அதில் நாம்கொண்டுள்ள ஆர்வத்தை வெளிப்படுத்தவும், நோர்வேயின் ஈடுபாட்டுடன் இலங்கையின் இனப்பிரச்சனைக்கு அமைதிவழியிலான தீர்வு எட்டப்பட வேண்டுமென்ற மேற்குலக முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவதாயும் தலைவர் அவர்களால் ஒருமாதகால ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்த அறிவிப்பு விடுக்கப்பட்டது. ஆனால் அரசாங்கமோ உள்நோக்கங்களின் அடிப்படையில் அதுபற்றிய தீவிர பரிசீலனையின்றி யுத்தநிறுத்தத்தை மறுத்து அறிக்கை விடுத்தது. ஆனாலுங்கூட விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கான நல்லெண்ணப் புறநிலையை கட்டிவளர்க்கும் பொருட்டு யுத்தநிறுத்தத்தை தாம் தொடர்ந்து கடைப்பிடிக்கப் போவதாகவும், அரசை இதுதொடர்பாக மீள்பரிசீலனை செய்யுமாறும் கோரிக்கை விடுத்தனர். ஆனால் அரசு அதற்குப் பாதகமான முடிவை வெளியிட்டு, தனது பலத்தால் சாதிக்க முடியாதுபோன யுத்தவாத முன்னெடுப்பிற்கு புலிகளின் ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தை தனக்கு சாதகமான சந்தர்ப்பமாக பயன்படுத்திக்கொண்டது;

(09ம் பக்கம் பார்க்க)

# எரிமலையின் பெருநிலம்

நாங்கள் காடுகளுக்குள் துரத்தப்பட்டு விட்டோம். நகரங்களிலிருந்து மட்டுமல்ல காடுகளுக்குள் வைத்தும் நாங்கள் துரத்தப்பட்டுக் கொண்டே இருப்பதாய் சிங்களம் கூறிக்கொண்டிருந்தது. தமது யாழ்ப்பாணப் பறிப்பின் பின் பெரும்பான்மை மக்களின் தொடர்பை எமது போராட்டம் இழந்துவிட்டதாய் மார்தட்டிக் கொண்டது சிங்களப் படைத்தலைமை. அதனால் தொடரும் போரில் நாம் முற்றாக அழிக்கப்பட்டு விடுவோம் என அவர்கள் கூறிவைத்தார்கள். எங்களது இறுதி மூச்சை எடுப்பதற்கான காலக்கெடுக்களைக் கூட அவர்கள் நிர்ணயித்திருந்தார்கள். இவற்றையெல்லாம் ஒரு எல்லை வரை உலகமும் நம்பிக்கொண்டு தான் இருந்தது.


ஆனாலும் வீழ்ந்து விடுவார்களென எல்லோரும் பார்த்திருக்க எம்மினம் நிமிர்ந்து கொண்டது. எல்லோரும் ஆச்சரியப்படும் படியாய் எம் எல்லோருக்கும் இப்படியொரு நிமிர்வு எப்படி வந்தது! மற்றவனின் துணையின்றி எழுந்து நடக்கவே முடியாதென்பதே நியதியாகிப்போன இவ்வுலகில் நின்று, எங்களுக்கென்று எவருமே இல்லாது நின்ற மக்கள் நாம் எப்படி நிமிர்ந்து கொண்டோம்! உறுதிகொண்ட எங்கள் தலைவனின் அருகிருந்து எம்மினத்தை நிமிரவைத்த அந்த மாபெரும் சக்தி எது!

வன்னி! அதுதான் அந்த மாபெரும் சக்தியை எமது விடுதலைப் போருக்குத் தந்தது. இந்தப் போரின் அதியுச்சமான வரலாற்றுக் கட்டம் வன்னியில் தான் சூழல்கிறது. தமிழீழத்தின் அனைத்துப் பிரதேச மக்களினதும் கலவையாய் நிற்கும் வன்னி தான் அதன் சுமையைத்தாங்கிக் கொண்டது. தன் வரலாற்றைப் பறிகொடுத்து வெறுங்கையராய் நின்ற எம்மினத்திற்கு உலக வரலாற்றில் அதிபுயர் அத்தியாயங்களை பெற்றுக்கொடுத்த போரின் சுமைகளை வன்னியில் வாழ்ந்த மக்கள் தான் சுமந்து கொண்டார்கள். அப்படியொரு நிமிர்விற்காய் எம்மக்கள் இரத்தக்கண்ணீர் வடித்த நாட்கள் நினைவுகளுக்கு எவ்வளவு கடினமானவை.

எங்கள் மக்களை எதிரி என்றைக்குமே புலிகள் இயக்கத்திலிருந்து வேறுபடுத்திப்பார்த்தது கிடையாது. மக்களிலிருந்து புலிகளை வேறுபடுத்தித் தனிமைப்படுத்துதல் என்ற போர்வையில் நின்றுகொண்டு, மக்களையும், புலிகளையும் ஒன்றாகவே உலகிலிருந்து தனிமைப்படுத்த முனைந்தார்களேயன்றி வேறெதையும் அவர்கள் செய்யவில்லை; செய்ய நினைக்கவும் இல்லை. அதுவும் வன்னியில் வாழும் அத்தனை மக்களையும் அது முழுப் புலிகளாகவே பார்த்தது. அதன் வெளிப்பாடுகள் ஒவ்வொன்றும் அதையே சுட்டி நின்றன.

1999 இல் தமக்கு ஏற்பட்ட இராணுவத் தோல்வி ஒன்றிற்காக பந்துவில் கிராமத்தில் குண்டு வீசி சிறுவர்களையும், வயோதிபர்களையும் கொன்று குவித்தபோது, உண்மையை வெளியிட்ட சர்வதேச தொண்டர் நிறுவனத்திற்கு ''உங்களுக்கு மலேரியாவைத் தடுப்பதும், நுளம்புகளையும், பூச்சிகளையும் ஒழிப்பதும் தானே இங்கு வேலை, அதை மட்டும் பார்த்துக்கொண்டு இருங்கள்'' என ஸ்ரீலங்கா அரசு மிரட்டல் விடுத்திருந்தது. உணவுப் பொருட்கள் தடுக்கப்பட்டு, இடம் பெயர்ந்தவர்களுக்கான நிவாரணத்தையும ஸ்ரீலங்கா அரசு தடுத்த வேளை உலகெங்கும் சேவை புரியும் மனித உரிமை அமைப்பிடம் உதவி கேட்டபோது ''உங்களுக்கு உணவுப்பொருட்கள் வழங்குவதற்கு எமக்கு இங்கு அனுமதியில்லை'' எனத் தன் இயலாமையை வெளியிட்டிருந்தது. இவை இரண்டையும் மட்டுமே வைத்துப் பாருங்களேன். இப்படியொரு வாழ்வியல் மறுப்பிற்குள் நின்றுதான் வன்னியில் மக்கள் தமது போராட்டப் பழுவையும சுமந்தார்கள், சுமக்கிறார்கள்.

உலகெங்கும் ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து தமது சுதந்திர தேசத்திற்காய் போராடிய மக்கள் புரிந்த அர்ப்பணிப்புக்கள் புனிதம் வாய்ந்தவை. சோவியத் மக்கள் லெனின்கிராட்டிலும, ஸ்ராலின்கிராட்டிலும் எதிரிகளால் சுற்றி வளைக்கப்பட்டபோது வெளிப்படுத்திய உறுதி கடந்த நூற்றாண்டின் உலக வரலாற்றில் பெருமையுடன் பேசப்பட்டது. கோடாலிகள், கத்திகளுடன் மக்கள் போர்க்களம் சென்றதும், உண்ண உணவின்றி பட்டினியால் வாடிய மக்கள் தமக்குக் கிடைத்த சொற்ப உணவையும் தேசம காக்கும் தம் வீரர்களுக்காய் அனுப்பிவைத்து விட்டு பசித்திருந்து காத்திருந்ததும, தமது நகரை எதிரி வீழ்த்தும் வேளை வந்தால் தமது வீடுகள், கடைகள், கோவில்கள் எல்லாவற்றையும் தமது கைகளாலேயே அழித்துவிட தயாராய் வெடிமருந்துகளை பொருத்திவிட்டு காத்திருந்ததும் மனித உணர்வுகளை உலுக்கியெடுக்கும வரலாறுகள் ஆயின.



வல்லரசுகளின் ஆக்கிரமிப்புக்குள் சிக்குண்டவியட்நாம மக்கள் வயது வேறுபாடின்றி எல்லோருமே ஆயுதமேந்தி பெரும் சக்தியாய் ஒன்றுதிரண்டு போரிட்டதும், கொடிய பட்டினியால் வதங்கிய போதெல்லாம் தமது விடுதலை ஒன்றையே இலக்காக்கி எரித்திரிய மக்கள் பணியாது போரிட்டதும், அடக்குமுறையாளர்களை எதிர்த்துப் போராட வழியின்றித் தவித்த பாலஸ்தீன சிறுவர்களும், பெரியவர்களும் தாமே கிளர்ந்தெழுந்து கற்களால் எறிந்தே எதிரியை கலங்க வைத்ததும் விடுதலைக்காக போராடிய எல்லா மக்களையுமே பெருமை கொள்ள வைத்தன.

- அ. பார்த்தீபன் -

வன்னியில் எமது மக்களை அவர்களின் வாழ்வியற் சக்தியிடமிருந்து பிரித்தெடுப்பதற்காய் எத்தனை தந்திரங்களையெல்லாம் எதிரி கையாண்டான். கொடுமைகளால் மட்டுமே பணியவைக்கும் தோல்வி கண்ட பழைய தந்திரத்திற்குப் பதிலாய் கவர்ச்சிகரமான சலுகைகளையும் கூடவே கொண்ட புதிய தந்திரத்தால் அல்லவா எமது மக்களை பணிய வைக்க முயன்றான் துன்பங்களாலும், வேதனைகளாலும் நிரப்பிய முற்றுகையை வன்னியில் மக்கள் மீது ஏற்படுத்தி மறுபுறம் வசதியான வாழ்வு எனும் சலுகையைக் காட்டி எதிரி எம் மக்களின் ஆன்மபிடத்தின் மீது போர்தொடுத்தான். மீமெ ரியலின் சர்ந்தெடுக்கும் வாசனையின் பின்னால் எதிரி ஒளித்து வைத்த பொறியை எம் மக்கள் நன்றாகவே இனங்கண்டு கொண்டு எதிரியையும் அவன் சார்ந்தவர்களையும் வெட்கித்தலைகுனிய வைத்தார்கள். அப்படித்தான் எமது விடுதலைப்பயணத்தை வன்னியில் எம்மக்கள் விரித்துச்செல்ல வேண்டியிருந்தது. எதிரி தன் வலையை மேலும் மேலும் இறுக்கியபடியே இருந்தான்.

''ஜயசிக்குறுய்'' எனும் பெயரில் எதிரி பெரும் படையெடுப்பொன்றை செய்த காலங்கள். வன்னி மக்களின் வாழ்வாதாரமாய் எஞ்சி நின்ற கானகத்து நகரங்களை ஒவ்வொன்றாய் விழுங்கியபடி எதிரியின் 'வெற்றி உறுதி' நீண்டது. இறுதி நம்பிக்கையாய் நின்ற வன்னி மண்ணை எதிரி முழுமையாய் விழுங்கிவிடாதபடி போராளிகள் போரிட்டார்கள். அண்ணன், அக்கா, தம்பி, தங்கை, மைத்துனன், சித்தி என ஒரே உறவுகள் தம் தேசத்திற்காய் போராடுவதற்கென புறப்பட்டு வந்தார்கள். அந்தக் காலப்பகுதியில் வன்னி பட்ட துன்ப துயரங்கள் எழுதி மாளாதவை. தமது ஒவ்வொரு பின்னகர்வின் பின்னாலும் தமது மக்கள் சுமக்கப்போகும் வேதனைச் சுமைகளை எண்ணி ஒவ்வொரு புலி வீரனும் கண்ணீர் வடித்தான். அதனால் உறுதிபெற்றான். அத்தனைக்கும் மத்தியிலும் ''நிவாரண வெட்டு மக்கள் அவதி'' என செய்தி கூறும் பத்திரிகைத் தாள்களில் சுற்றியபடியே மக்கள் தமது வயிற்றையும், வாயையும் கட்டி அனுப்பி வைக்கும் உலருணவுகளை உண்ணும் போதும், அவற்றுள் முகம் தெரியாத தம் மைந்தர்களிடம் சுகம் விசாரித்து அவர்கள் அனுப்பி வைக்கும் கடிதங்களை வாசிக்கும போதும் ஒவ்வொரு புலி வீரனும் தன் மக்களை எண்ணி பெருமிதம் அடைந்தான்.

எதிரி மாங்குளத்தின் முன்னால் உறுதியாக மறிக்கப்பட்டிருந்தான். அவனது வெற்றி உறுதியற்று தள்ளாடிக்கொண்டிருந்தது. அந்தக்கடின நாட்கள் நீட்சிபெற்று வருடமாய் மாறியது. தேசத்தைக்காக்கும் அந்த உயரிய போர்க்களத்தின் காவலரண்களுள்ளேயே தம் வாழ்வின் ஒரு வயதைக் கழித்திருந்தார்கள புலி வீரர்கள். மனதிற்கு சுமை தரும் அந்த யுத்த களத்திற்கு போராளிகளை அரவணைக்கும் ஆசைகொண்டு மக்களெல்லாம் எழுச்சி கொண்டு, அணிதிரண்டு வருவதாய் செய்திவந்திருந்தது. அதை அறிந்ததும் களத்தில் எம் வீரர்களெல்லாம் அடைந்த ஆனந்தம் எல்லையற்றது. ஆனாலும் அந்தக் கொடியகளம் அன்று எம் உறவுகளின் சங்கமத்தைத் தடுத்தது. போராளிகளை அந்தக் காவலரண்களிலிருந்து அசையவிடாதபடி எல்லா முனைகளிலும் எதிரி தாக்கினான். உயிராபத்துக்கள் ஏற்படக் கூடாது என்ற ஆதங்கத்தில் அணிதிரண்டு வந்த மக்களையெல்லாம் முறிகண்டியில் வைத்தே மறிக்க வேண்டியதாயிற்று. தம் காவற்தெய்வங்களை ஒரு பொழுது கூட பார்க்க முடியாது பாவப்பட்ட மக்களாய் திரும்பினர். அந்தநாள் எம் மக்களிடையேயும் போராளிகளிடையேயும் ஏற்படுத்திய சோகத்தின் சுமையை உங்களால் புரிந்துகொள்ள முடியுமானால் புரிந்து கொள்ளுங்கள். ஆயினும் வன்னி மக்கள் தம் புதல்வர்களிடம் அன்று வெளிப்படுத்திய நேசமும் பாசமும் எமது போராட்டத்தை ஆயிரம் மடங்குகள் உறுதியாக்கிற்று

சிறிது காலத்திலேயே களம் இன்னமும் விரிவு கண்டது. தோல்வி உறுதியாகத் தெரிவதை உணர்ந்த எதிரி புதிய தந்திரங்கள் வகுத்தான். வன்னியின் எல்லாத்திசைகளும் எதிரியின் இலக்குகளாயின. எமது போராட்டம் இன்னமும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டது. ஒவ்வொரு போராளியும் தன் சக்திக்கு மீறியதாய் பல மடங்கு சுமைகளை சுமந்துகொண்டான். தன் புதிய மூலோபாயத்தால் வன்னி

யால் இனியும் தாக்குப்பிடிக்க முடியாது என எதிரி புதிய நம்பிக்கை கொள்ளலானான். வன்னிப் பரப்பெங்கும் புலிகள் இயக்கத்தின் பலம் பரப்பப்பட்ட நிலையில் அடுத்தகட்டம் நோக்கிய எம் வரலாறு ஏக்கத்துடன் காத்திருந்த காலகட்டம் அது. அப்போது தான் எதிரியின் கொலை அச்சுறுத்தலையும் தாண்டி மக்கள் களம்நோக்கி வரத்தொடங்கினார்கள். உணவுப்பொருட்களுடனும், களவேலைகள் செய்வதற்காகவும் எல்லாத்தரப்பட்ட எம்மக்களும் களம் வந்து போராளிகளின் சுமைகளை புரிந்து கொண்டார்கள். அங்கிருக்கும் போராளிகளிடம் அவைபற்றி தாமே அறிந்துகொண்டார்கள். இவைதான் வன்னியில் பிறப்பெடுத்த அந்த மாபெரும் சக்தியின் ஊற்றுக்கண்ணாய் அமைந்தது.


''எமது தாயகமாம் தமிழீழத்தை, வன்பறிப்பாளர்களிடமிருந்து—'' எமது மக்கள் எல்லோரும் ஒன்றுகூடி உறுதியெடுத்துக் கொள்ளும் அந்த நிகழ்வுகள் எங்கும் நம்பிக்கை ஒளியாய் பரவத்தொடங்கியது. ''தமிழர் தாகம் தமிழீழத் தாயகம்'' என எம் மக்கள் எழுப்பிய கோஷ ஒலி எங்கும் எதிரொலித்த போது ஒவ்வொரு புலிவீரனும் தன் தோள்கள் பல்லாயிரம் மடங்குகள் வலிமை பெற்றுவிட்டதாய் உணர்ந்துகொண்டான். அன்றிலிருந்து தான் எமது வரலாறு உயரிய கட்டம் ஒன்றை நோக்கித் திரும்பத்தொடங்கியது. விரைவிலேயே மக்கள் எல்லோரும் முதியவரென்றும், இளையவரென்றும் வேறுபாடுகளின்றி காவல் நிலைகளை நோக்கி அணி வகுத்தார்கள். எம் வரலாறு சுமந்த தியாகி திலீபனின் இலட்சியப் பசி அடங்கும் நாளை அடைந்துவிட்டதாய் உணர்ந்தோம் அன்று. எமது வரலாறு தன் புதிய பக்கங்களை திறந்து கொண்டது.

எதிரியால் மோசமாய் சுமத்தப்பட்ட குடும்பச் சுமைகளை சுமந்தபடி போராட்டச் சுமைகளையும் முழுமையாய் சுமக்கத்தொடங்கினார்கள் எம் மக்கள். இறுதியில் அதுவும் அவர்கள் வாழ்வின் ஓர் அங்கமாகவே மாறிக்கொண்டது. நாளாந்தம் உழைத்து குடும்பம் நடத்தும் ஒரு குடும்பத் தலைவன் காவல் நிலைகளுக்கு வந்து போராளிச் சகோதரர்களின் சுமைகளைப் பகிர்ந்து கொண்ட கதைகள் முழுமையாய் இதில் எழுதி முடிக்கக் கூடியவைகள் அல்ல. எமது பெண்கள் சமூக வாழ்விலும், கள வாழ்விலும் மாறிமாறி ஈடுபடும் புதிய நிலையும், அவற்றால் எழும் சவால்களுக்கு எதிரான அவர்களின் தனியான போராட்டமும் தனியே எழுதப்பட வேண்டியவை. எமது மக்களின் இத்தகைய எழுச்சியின் விளைவாய் ஓயாத அலைகள்-03 என்ற பெரும் சமர் பிறப்பெடுத்தது. அதற்கான அடிப்படையை வன்னி மக்களின் நேரடிக் களப்பங்கேற்பே பூர்த்தி செய்தது.

1999, நவம்பர், 01 எங்களுக்கெல்லாம் பெருமை தந்த நாள் அது. ஒட்டுசுட்டானில் முதற்சமர் வெடித்து வெற்றியுடன் அது தொடர்ந்த போது வன்னியே ஓங்கியெழுந்து ஆர்ப்பரித்தது. காவல் நிலைகளில் நின்ற எல்லைப்படை வீரர்கள் பொறுமையிழந்தவர்களாய் ஆயினர். அவர்கள் தடுத்து நின்ற எதிரிகளை இப்போது தேடிச்சென்று துரத்தியடிக்கும் ஆர்வம் அவர்களுள் எழுந்தது. தளபதி தீபனின் கட்டளையில் மாங்குளத்தில் புதிய முனையொன்று திறக்கப்பட்ட போது மூன்றுமுறிப்பில் நின்ற எல்லைப்படை வீரர்களெல்லாம் தாமும் சண்டையிடப்போவதாக ஆரவாரித்தனர். அதனால் அக்களத்தில் அவர்களையும் தவிர்க்க முடியாது சண்டையில் இறக்க வேண்டியதாயிற்று. பாதுகாப்பு நிலைகளில் எமது சுமைகளை பகிர்ந்துகொள்ளவந்த மக்கள் போராளிகளோடு இணைந்து வலிந்த தாக்குதல் களத்தில் முன்னேறிச் சென்றது எமது போரில் அடுத்த கட்டங்களில் ஏற்படுத்தப்போகும் பிரகாசமான மாற்றங்களைக் காட்டியது.

ஓயாத அலைகள் -03 இன் முதற்கட்டத்தில் எல்லைப்படை வீரர்கள் காட்டிய மூர்க்கமும், ஆர்வமும் அச்சமரின் அடுத்தகட்டங்களில் அவர்களுக்கென முக்கிய இடத்தை பெற்றுக்கொடுத்தது. சிறப்பு எல்லைப்படை தாக்குதல் அணிகள் எமது போராளிகளுடன் இணைந்து முக்கிய களங்களில் சண்டையிட்டன. நவம்பர், 18ம் திகதி ஓயாத அலைகள் 03 இன் இரண்டாம் கட்டத்தின் போது பெரிய மடுவினூடான முனையில் லெப்.கேணல் ராபட்டின் தலைமையில் ஜெயந்தன் படையணியுடனும், மற்றைய முனையான பள்ளமடுவில் லெப் கேணல் லக்ஸ்மனின் தலைமையில் மாலதி, மன்னார் தாக்குதல் அணிகளுடனும் சிறப்பு எல்லைப்படை அணிகள் சண்டையின் முன்னணி நடவடிக்கைகளில் இறக்கப்பட்டன. வெற்றிகளைக் குவித்துத்தந்த அச்சமர்க்களத்தில் ஏனைய படையணிகளைப் போலவே எல்லைப்படை அணிகளும் தமக்குத் தரப்பட்ட பணிகளையெல்லாம் வெற்றிகரமாய் செய்து முடித்தன. அதுபோலவே ஓயாத அலைகள் 03 இன் மூன்றாவது கட்டத்திலும் எல்லைப் படையின் சிறப்புத் தாக்குதல் அணிக்கான முன்னணித் தாக்குதல் பணிகள் ஒதுக்கப்பட்டிருந்தன. லெப்.கேணல் ராபட்டின் தலைமையில் ஜெயந்தன், அன்பரசி படையணிகளுடன் இணைந்து அச்சமரின் வெற்றிக்காய் எல்லா முனைகளிலும் அவர்கள் உழைத்தார்கள்.

இவ்வாறு முதிர்ச்சிநிலை நோக்கிப் பயணித்த வன்னி மக்களின் போர்ப்பங்களிப்பும், எழுச்சியும் ஆனையிறவுப் பெருந்தள வீழ்ச்சிக்கான இறுதிக்கட்டச் சமர்களில் காத்திரமான கட்டத்தை அடைந்தது. தமிழர் வரலாறு உள்ளவரை வாழப்போகும் அந்தப் புகழ்பூத்த சமரில் எமது மக்களின் பங்கு பிரித்துப் பார்க்க முடியாதபடி இரண்டறக் கலந்திருந்தது. எமது மக்கள் படைக்கட்டுமானத்தின் மாணவர் படை, கிராமியப்படை, எல்லைப்படையென எல்லாமே இச்சமருக்கான பணிகளில் பங்கெடுத்திருந்தன. நவீன வசதிகளும், சர்வதேச ஆதரவும் கொண்ட ஸ்ரீலங்கா அரசே ஆனையிறவுச் சமரில் காயமடைந்த தன் வீரர்களை பராமரிப்பது உள்ளிட்ட பின்னணி வேலைகளை செய்யமுடியாது திணறியபோது, வசதிகள் ஏதுமற்ற வன்னியில் எமக்கான பின்கள வேலைகள் சிரமமின்றி செய்து முடிக்கப்பட்டமை எவரையும் ஆச்சரியத்திற்கு உள்ளாக்கக்கூடியவை. அதுவும் களத்தில் காயமடைந்த எமது போராளிகளை பராமரித்து பாதுகாப்பதில் எத்தகைய குறையுமின்றி எமது மக்கள் ஈடுபட்டார்கள். அவர்களைச் சிரமமின்றி களத்திலிருந்து நகர்த்துவதற்காக பாதைகளைச் சீரமைத்து, இரத்ததானம் செய்து, மருத்துவமனைகளுக்கு வந்து பராமரித்து, அவர்களுக்குத் தேவையான உணவுகள் தயாரித்து எமது மக்கள் செய்த உயரிய பணி எம் போராளிகளி



டையே ஆழ்பதிவுகளை ஏற்படுத்தியது. அந்த நாட்களில் வன்னி மக்கள் முழுமையாய் போர்ப் பணிகளிலேயே ஈடுபட்டிருந்தார்கள். இவற்றை விட அந்தச்சமரின் கடினமான களமொன்றில் எல்லைப் படையின் சிறப்பு அணியொன்று போரிட்டுக்கொண்டிருந்தது.

உலக வரலாற்றிலேயே முக்கிய இடம் பிடித்த ஆனையிறவுச் சமரின் ஊடறுப்பு நடவடிக்கையில் (இத்தாவில்) சிறப்பு எல்லைப் படை வீரர்களின் பங்கு வன்னி மக்களின் பெருமையின் சிகரமாய் ஆனது. சமருக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயமே சிறப்பு எல்லைப்படை வீரர்கள் தமது குடும்பங்களை நீண்ட எல்லையில் பிரிந்து வந்து உயர் சண்டைப் பயிற்சிகளில் ஈடுபட்டார்கள். எமது முன்னணிப்படையணிகளின் ஓர் அங்கமாகவே சிறப்பு எல்லைப்படையின் அணியும் இணைக்கப்பட்டது. சிங்களத்தின் முன்னணிப் படையணிகளையே திணறவைத்து தோற்கடித்த அச்சமர்க்களத்தில் சிறப்பு எல்லைப் படை வீரர்கள் சளையாது சமரிட்டதும், அதற்காய் தமது உயிர்களை அர்ப்பணித்ததும் வரலாற்றின் சிறப்பான அம்சங்கள். ஆரம்பத்தில் எல்லைப்படை வீரனாய் களம் புகுந்து அச்சமர்க்களத்தில் முழுமையான போராளிகளாய் மாறியவர்களுள், எமது போராளிகளையே வழி நடத்தும் அணித்தலைவனாய் அக்களத்திலேயே செயற்பட்ட மாவீரன் கப்டன் லோறன்சின் செயற்பாடுகள் குறிப்பிடத்தக்கவை.

இப்படித்தான் வன்னி மக்களின் முழுமையான போர்ப்பணி வளர்ச்சிகண்டது. எல்லைப் படையில் சண்டைத் தேர்ச்சி மிக்க அணிகள் உருவாகின. எம்மால் திட்டமிடப்பட்ட சண்டைகளில் மட்டுமல்லாது எதிரியால் திட்டமிடப்பட்டு நடாத்தப்படும் சண்டைகளை முறியடிப்பதிலும் சாதனை படைக்கக்கூடிய தமது ஆற்றலை, 2000 செப்ரெம்பர் ஒன்பதாம் நாள் நடந்த கடுமையான பாதுகாப்புச் சமரொன்றில் நிரூபித்தனர்.

அன்று அதிகாலை 5.10 மணி. 'ரிவிகிரண' என்ற பெயர் சூட்டி, புதிதாய் கொள்வனவு செய்த நவீன விமானங்கள், பீரங்கிகள் எல்லாவற்றையும் ஒன்று திரட்டி அரியாலை, தென்மராட்சிப் பகுதிகளில் ஐந்து முனைகளினூடு மிகப்பெரும் நடவடிக்கையொன்றை எதிரி எடுத்தான். இறுதியில் 250 ற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டும், 1000 இற்கு மேற்பட்டோர் காயமடைந்தும் சிங்களப்படைகளுக்கு படுதோல்வியைக் கொடுத்த அந்நடவடிக்கையின் முறியடிப்பிற்கு தலைமை தாங்கிய தளபதி கேணல் சொர்ணம் அவர்கள் சொன்னவை எமது மக்களுக்கு பெருமை சேர்க்கும் வார்த்தைகள்.

''எதிரியின் கடுமையான ஆயுத வலுவுடன் நடாத்தப்பட்ட யுத்தகளத்தில் எமது போராளிகள், அணித்தலைவர்கள் காட்டிய நிதானமும், உறுதியுமே அவர்களின் வீரத்திற்கு வெற்றியைத் தந்தது. அதிலும் குறிப்பாக எங்கள் எல்லைப்படை, சிறப்பு எல்லைப்படை வீரர்களின் பேராற்றல் இத்தனை தூரம் வளர்ந்திருப்பது வியப்பையும், பெருமையையும் தந்தது. அவர்களின் ஆற்றல் இதில் முழுமையாக நிரூபிக்கப்பட்டன என்று தான் நான் சொல்வேன்.'' இப்படியே தான் அந்த தொடர்ந்த மற்றும் பல கடுமையான சமரரங்குகளின் நிலைமையும் இருந்தது. அச்சமரரங்குகளில் வைத்துத்தான் எமது எல்லைப்படை வீரர்களின் வீரமும், தியாகமும் நிறைந்த எண்ணற்ற அர்ப்பணிப்புக்கள் நிகழ்ந்து முடிந்தன. அவை தனியே எழுதப்பட வேண்டிய உணர்வை உலுப்பும் நீண்ட பக்கங்களை கொண்டவை.

இவ்வாறு விடுதலைக்கான போர்க்களத்தில் வன்னியில் எமது மக்களின் போர்ப்பங்களிப்பு அதிசயிக்க வைப்பது இத்தகைய களங்களில் எம் மக்கள் சிந்திய குருதி புனிதம் நிறைந்தது. ஆர்த்தங்கள் பொதிந்தது. எண்ணிப் பார்ப்பதே எவருக்கும் கடினமாய் இருக்கும். இவ்வளவு தீவிரமாய் விடுதலைப்போரை தாங்கி நிற்கும் எம் மக்களின் தேசப்பற்றை அறிய எவருக்கும் ஒரு பெருமை தோன்றும். அத்தனை தூரம் விடுதலை வேண்டி நிற்கும் ஒரு மக்களினம் கொண்டிருக்க வேண்டிய தகுதிப்பாட்டை இன்று எமது மக்கள் எட்டி நிற்கிறார்கள்.

இப்போது எண்ணிப்பார்க்கிறோம். எங்களைக் காடுகளுக்குள் துரத்தி விட்டதாக சிங்களம் எக்காளமிட்ட நாட்கள் எங்களின் இறுதி மூச்செடுப்பிற்கான காலக்கெடுக்கள் — இவற்றிலெல்லாம் இறுதி முடிவுகாண எதிரி நம்பிக்கையுடன் செய்த ஜயசிக்குறுய் நடவடிக்கை இவையெல்லாம் எதிரியின் வெறும் பகற்கனவுகளாய் எவ்வாறு அர்த்தமிழந்து போயின? எமது போராளிகளின் வைராக்கியமும், வன்னி மக்களின் முண்டு கொடுப்பும், இறுதியில் அவர்களின் எழுச்சியால் உருவான எல்லைப்படையணிகளின் போர்ப்பங்கெடுப்பும் எம் தலைவனின் கரங்களைப் பலப்படுத்த, எதிரியின் கற்பனைகளெல்லாம் ''கடற்கரையில் கட்டிய மண்வீடுகள்'' போலாகின. ஒரு இனத்தின் விடுதலைப் போரை அழிப்பதென்பது அந்த இலட்சியத்தை சுமந்தவர்களின் உயிருள்ளவரை முடியாதென்பதை உலகிற்கு ஒரு பாடமாக வன்னி மக்கள் சொல்லி வைத்துள்ளார்கள்.

# கரும்புலி மேஜர் சிற்றம்பலம்

என்றைக்குமே வேகமாக இயங்கிக்கொண்டிருக்கும் அந்த முகாம் இன்றும் அதுபோலவே இயங்கிக் கொண்டிருந்தது. தலைநகரில் பல உயிர்களைக் கொடுத்துச் செய்து முடிக்கப் போகும் அந்தத் தாக்குதலுக்காய் அவர்கள் ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் முன் எழுந்திருந்த எண்ணங்களெல்லாம் சிற்றம்பலம் பற்றியதாகத்தானிருந்தது. இந்தத் தாக்குதலை சிற்றம்பலம் என்னென்று செய்துமுடிக்கப்போகிறான்? இந்த நீண்ட நடைப் பயணத்தை அவன் எப்படி நடந்து கடக்கப் போகின்றான்? ஏற்கனவே விழுப்புண்பட்டு சிறு எலும்புத்துண்டு அகற்றப்பட்ட காலொன்று அதற்கு மேலாய் அவனைச் சுமக்கக்கூடிய பாரம் கொண்ட பொதி அவன் சுமப்பதற்காய் காத்திருக்கிறது. இத்தனையும் சுமந்து கொண்டு இவனால் இதைச் செய்துவிட முடியுமா? என்ற வினாக்கள் அங்கிருந்த போராளிகளின் மனதைக் குடைந்துகொண்டிருந்தது.

ஆனால் இந்தத் தாக்குதலுக்காய் தூக்கம் தொலைந்துபோய்ப் பல இரவுகளைச் சுமந்திருந்த சிற்றம்பலம் உற்சாகமாய் இறுதிநேர அலுவல்களில் மூழ்கியிருந்தான். அவன் சுமந்தது இரவுகளை மட்டுமல்ல அவனது வாழ்க்கையே சுமைகள் நிறைந்ததுதான்.

சின்ன வயதிலேயே தந்தையின் உழைப்பு முடங்கிப்போக குடும்பத்தின் சுமையை தாஸனே அவன் தான் சிற்றம்பலம், தாங்கவேண்டியதாயிற்று. அவனது எதிர்கால வாழ்க்கைக்காக பள்ளிசெல்லுகின்ற வயது அப்போது. அந்த வயதில் அதை விட்டுவிட்டால் அவனது எதிர்காலம்? அதனால்தான் அவள் அதைச் சொல்ல வேண்டி வந்தது. ''தம்பி நீ வேலைக்கு போக வேண்டாமடா. பள்ளிக்கூடத்துக்குப்போ. நான் ஏதும் சின்ன வேலையெண்டாலும் செய்து சாப்பாடு போடுறன்'' அம்மா சொல்லி முடித்துவிட்டு அவனைப் பார்ப்பதற்குள் அவன் போய் விடுவான்.

காலையில் மாமாவின் ''சயிக்கிள்'' கடையில் நிற்கும் அவன் அவசர அவசரமாய்ப் பள்ளிக்கூடம் போய், பின் மீண்டும் சயிக்கிள் கடையில், தோட்டத்தில் என்றவாறாய் நிற்காமல் சுற்றும் பூமிபோல சுழன்றுகொண்டிருந்தான். அவன் அடம்பிடியிருந்தும் அவனது முயற்சிக்கு மேலால் வந்து நிற்கும், குடும்பத்தின் செலவீனங்கள்.

இனி அந்த முடிவைத் தவிர வேறுதெரிவுகள் அவனுக்கில்லை. நிகழ்கால வாழ்க்கைக்காய் அவனது எதிர்கால வாழ்க்கையை இழக்க வேண்டிய நிர்ப்பந்தம். தாஸன் இப்பொழுது மாணவனல்ல; பள்ளிப் பருவத்தில் குடும்பச் சுமை தாங்கிய உழைப்பாளி.

எரிபொருளில் இயங்கும் வாகனம்போல அவனது உழைப்பில் இயங்கிக்கொண்டிருந்தது அந்தக் குடும்பம். தாஸன் வியர்வையையும் தாயின் கண்ணீரையுமே தாம் உண்ணுவதாய் எண்ணியது அவனது உறவுகள்.

இத்தனை கடினங்களையும் அவன் தாங்கியது அவனது ஒரேயொரு அக்காவிற்காகவும் தம்பிமார்களுக்காகவும் தான். காலையிலிருந்து மாலை படியும்வரை அங்கொருவேலை இங்கொரு வேலையென ஓடி ஓடி உழைத்து, இளைக்க இளைக்க கையில காசுடன் வந்துநிற்கும் அவனது களைப்பு, தன் உறவுகளோடு சேர்ந்து உணவுண்ணும் போது மறைந்துபோகும். அந்த மன ஆறுதலுடன் தான் அவனது இரவுத் தூக்கம் கழியும்.

அன்றும் அக்காவுடன் கடைக்குச் சென்றுவிட்டு திரும்புகையில புடவைக் கடை ஒன்றின் முன் அக்கா நின்றுவிட்டாள். அவளுக்குப்பிடித்த சட்டையொன்றைக் கண்வெட்டாமல் அவள் பார்த்துக்கொண்டிருந்தாள் தாஸன். தன் அருகில் வந்தவனின் காலடி ஓசையைக் காணாது திரும்பியபோது, கடைக்காரன் சட்டையின் விலையைச் சொல்லிக்கொண்டிருந்தான். ஆனால் அவனது உழைப்பிற்கு அது பொருத்தமானதல்ல நிறைவேற்ற முடியாத அக்காவின் ஆசையை எண்ணி அவனது உள்ளம் ஏங்கியது. ஒரு மலையின் உச்சியிலிருந்து கண்ணுக்குத் தெரியாத அருவி ஒன்று கசிவதுபோல அவனது விழிகள் மெல்லக் கசிய, அதைக்கண்டோ என்னவோ அவள் சட்டையைப் பார்க்காதவள் போல தொடர்ந்தும் நடந்தாள்.

தாஸன் தன் அக்கா மீது அளவற்ற பாசம் வைத்திருந்தாலும் அவனது மனம் யாருக்காகவும் இளகும். சிங்கள இராணுவத்தின்



# போராளியின் குருதிச்சுவடுகள்

கரும்புலி

## மேஜர் சிற்றம்பலம் / குமார்

இராஜேந்திரம் சதயகுமார்

சுதுமலை, யாழ்ப்பாணம்;

பிறப்பு 1974 / 07 / 23

இயக்கத்தில் 1991 / 05 / 23

வீரச்சாவு 1997 / 05 / 03

சகோதரர்கள் ஒரு அக்காவும் ஒரு அண்ணனும் இரு தம்பிகளும்

பங்கு பற்றிய தாக்குதல்கள்

(1 சுழல்காற்று இராணுவ நடவடிக்கை மீதான எதிர்த் தாக்குதல்

2) சீனன்குடா விமானத்தளம் மீதான கரும்புலித்தாக்குதல்

கண்ணிவெடியில் சிக்கி காலொன்றை இழந்த பின் அவள் அணிந்திருந்தது, செயற்கைக்கால். தாஸனின் சொந்தங்களுக்குள் அவளும் அடங்குகிறாள். அவன் கண்களுக்கு அவள் தென்படும் போதெல்லாம் அவள் அணிந்திருந்த செயற்கைக்காலபாதம் அவளிற்குப் பொருத்தமற்று இருப்பதை அவனால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. நல்ல பாதம் அணிய வேண்டும் என்ற அவளின் ஆசையை உணர்ந்து கொண்டு அதற்காகப் பணம் சேர்க்க, அதிகாலையிலெழுந்து யாழ்ப்பாணத்திலிருந்து வடமராட்சி வரை துவிச்சக்கரவண்டியில் பயணம் செய்து தினசரிப் பத்திரிகை கொடுத்து உழைத்த அவனின் மனதின் மென்மையை அவனுடன் நெருங்கிப் பழகியோருக்குத் தெரியும்.

**- புரட்சிமாறன் -**

இவ்வாறு, தான் குடும்பத்தின் மீதும் உறவுகள் மீதும் வைத்திருந்த பாசத்தைப் பயிற்சிப் பாசறையில் தன் தோழர்களுக்குச் சொல்லிவிட்டு மௌனமாகவிருந்தான். ''மச்சான் குடும்பம், சொந்தமெண்டு உருகிவழியிறாய், பேந்தேன் வீட்டை விட்டிட்டு இயக்கத்துக்கு வந்தனி, பேசாம அங்கையே இருந்திருக்கலாந்தானே?'' அந்த வினாவின் பின் நிலவிய மௌனத்தைக் கலைத்துவிட்டு அவன் உறுதியாய்ச் சொன்ன வார்த்தைகளில் எவ்வளவு அர்த்தங்கள் பொதிந்திருந்தன.

''மச்சான் நான் அக்காவிலையும் எங்கட வீட்டுக்காறரிலையும், எல்லாரிலையும் பாசமாத்தானிருந்தனான். இப்பவும் அதைவிட மேலாப் பாசம் வச்சிருக்கிறன். ஆனா ஒண்டு சொல்லுறன் வெள்ளம் வருகுதெண்டா அணைகட்ட வேணுமெண்டு எல்லாருக்கும் தெரியும். அணையை வெள்ளம்வாற இடத்தில்தான் கட்ட வேணும். வீட்டைச் சுத்திக் கட்டக் கூடாது. எங்கடையாக்கள் இப்பவும் வீட்டைச் சுத்தித்தான் அணைகட்டிக்கொண்டிருக்கினம்.''

அந்த வார்த்தைகளின் கனதியின் பின் தோழர்களால் பேசமுடியவில்லை. அவனது அர்த்தம் பொதிந்த வார்த்தைகளைப் புரிந்துகொண்டதால் அவர்கள் மௌனித்துப் போனார்கள். அவனது உள்ளத்து உறுதியும் வார்த்தைகளின் தெளிவும் அவர்களை அதிசயிக்கவைத்தது.

ஆனாலும் மற்றவர்கள் வாழ்க்கைக்காக ஏங்கும்போது தன்னை இழந்து - வருந்தி அவர்களின் மகிழ்வில் மனநிறைவடையும் அவனது இயல்பு இன்னமும் மாறாமலிருந்தது.

பயிற்சிப் போராளிகளுக்கு தாயாக தந்தையாக சிற்றம்பலம் இயங்கிக் கொண்டிருந்தான். பகல் முழுதும் பெற்ற கடின பயிற்சியின் விளைவாய் போராளிகள் உறக்கத்திற்குச் சென்றுவிடுவார்கள். சிற்றம்பலத்தின் படுக்கை வெறுமையாக இருக்கும். காய்ச்சலினால் நடுங்கிக்கொண்டிருக்கும் போராளிகளைத் தன் மடியில் வைத்து உணவூட்டிக் கொண்டிருப்பான் சிற்றம்பலம். அவர்கள் தூங்காவிட்டால் சிற்றம்பலத்தின் படுக்கை அன்று வெறுமையுடனேயே கழியும்.

இப்படி அவன் எத்தனை மென்மையாயினும், அவனது இலட்சிய உறுதி உருக்குப் போன்று கடினமானதாகவேயிருந்தது.

சேந்தாங்குளப்பகுதியில் சிங்கள இராணுவத்தின் சுழல்காற்று இராணுவ நடவடிக்கைக்கெதிராய் விடுதலைப் புலிகள் சுழன்று சுழன்று பதிலடித்தாக்குதல் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அதில் ஒருவனாய் சிற்றம்பலமும் சண்டையிட்டுக்கொண்டிருக்க, துப்பாக்கி ரவைபொன்று அவனது காலைத் துளைத்துச் சென்றது. அவனது காலிலிருந்து வழிந்த குருதியுடன் எலும்பின் சிதைந்த துகள்களும் கலந்திருந்தன.

சிற்றம்பலத்தால் இனிச் சண்டை செய்ய முடியாது; அவனால் இனி பயிற்சிகள் செய்ய முடியாது; என்று தான எல்லோரும் எண்ணினார்கள். ஆனால் ஒன்றுக்கொன்று சமனில்லாது நிற்கும் அந்தக் கால்களாலேயே தன்னால் இயன்றதைச் செய்து முடித்துவிட வேண்டுமென்று அவன் முயற்சித்துக்கொண்டிருந்தான். காயமடைந்த காலிற்கு மட்டை கட்டிய நிலையில் மருத்துவ விடுதியில் சிற்றம்பலம் ஓய்வெடுத்துக்கொண்டிருக்க, காயம் மாறிய நிலையில இருந்த போராளிகளைக் கூட்டிச்செல்ல வாகனம வந்திருந்தது காயம் மாறிய போராளிகள் உற்சாகத்துடன் செல்ல அவர்களை வழியனுப்பிய மருத்துவ விடுதிப் பொறுப்பாளர், சிற்றம்பலத்திற்கு ஆறுதல் சொல்ல வந்தபோது அவனைக் காணவில்லை. முகாமின் சகல இடத்திலும் தேடுதல் நடத்தியாகிவிட்டது சிற்றம்பலம் எங்கே போயிருப்பான் என்பதை இப்பொழுது அவரால் விளங்கிக் கொள்ள முடிந்தது. மட்டை கட்டி ஆறாதிருக்கும் காயத்துடன் அவன் சமர்முனைக்குப் புறப்பட்டுவிட்டான். பின்னர் அவனைத் தேடிப்பிடித்து சண்டைக்குப் போகாமல மறிக்க அவனுடன் பெரும் போராட்டமொன்றே நடத்த வேண்டியதாயிற்று.

அவனது இலட்சியப் பற்றும் தேசத்தின் மீது கொண்ட உறுதியையும் அவனது செயல்கள் சொல்லி நின்றன. அந்த உறுதியுடன்தான் அவன் கரும்புலிகள் அணியில இணைந்து கொண்டான்.

சாதாரண மனிதன் கூட கடினப்பட்டு எடுக்கும் அந்தப் பயிற்சியை சிற்றம்பலம் தன் உடல் வலிமையால்ல, மனவலிமையால்தான் எடுத்தான். அவனது அந்த முயற்சியின் இறுதியில், அவனது மூன்று வருட கடின உழைப்பின் விளைவைக் காட்ட அவனன்று உற்சாகமாய் இயங்கிக்கொண்டிருந்தான்.

ஆனால் எல்லோர் முகத்திலும் கவலைக் குறிகள்; கண்ணீர்க் கோடுகள்; அந்த இரவுப் பொழுதின் மௌனத்திலும் யாருக்கும் கேட்காத சிலவச சின்ன முனகல்கள். எல்லாமே சிற்றம்பலம் பிரிந்துவிடப் போகிறான் என்பதனால்தான். என்றைக்குமே மற்றவர்களுக்காக வாழப் பழகிப் போனவன்; இன்றைய கையசைப்பின் பின் நாளைய வரலாறாகப் போகும் அவனை எண்ணி அவர்கள் விக்கித்துப்போய் நிற்க, அவனோ தோளில் பாரச் சுமையை தாங்க, மெல்லக் குனிந்து தோளில்

(09ம் பக்கம் பார்க்க)

**அவன் தன் எஞ்சிய சக்திகளை ஒன்றிணைத்து தன் ஆயுதத்தை இலக்குடன் இணைத்துக்கொண்டான். ஆனால் இப்போதும் அவனைத் துளைத்தன துப்பாக்கிச் சன்னங்கள். ஆனாலும் அவன் விசைவில்லை அழுத்தினான்.**

கொழுவி இடுப்புப் பட்டியைக் கட்டினான். அவனது உறுதிபோலவே அந்தச் சுமையும் உறுதியாக அவனைப் பற்றிக்கொண்டது.

பறவைகளின் ராகங்களும், பூச்சிகளின் ரீங்காரமும், விலங்குகளின் இடைவிட்ட உறுமலும் காட்டுக்குள் கேட்டுக்கொண்டிருந்த பொழுதில் அந்தப் போராளிகளின் தழுவல்களின் பின்னால் கையசைப்புடன் பயணத்தைத் தொடர்ந்தார்கள். சிற்றம்பலம் தன் இயலாத காலால் இழுத்திழுத்து நடந்துகொண்டிருந்தான். அவன் நடந்துகொண்டிருந்தது அவனது கால்களாலல்ல. மனவலிமையால்தான். ஏனென்றால் அவன் கடக்கப் போவது நான்கைந்து கி.மீ. தூரமல்ல. நூற்றிப்பத்து கி. மீ. களையும் தாண்டிய தூரம்

உடலை உட்புகுத்த முடியாத இறுசல் பற்றைகளுக்குள்ளால் தோளில் தாங்கிய அந்தப் பாரச்சுமையுடன் கைகளாலும் கால்களாலும் நடந்துகொண்டிருந்தார்கள். நான்கைந்து நாள் தொடர்ச்சியான பயணம். ஓய்வென்பது உணவுண்ணும் போது மட்டுந்தான். நித்திரையைக் கண்டு நீண்ட நேரமானதால் கண்கள் சிவந்துபோக அந்த சுட்டெரிக்கும் வெய்யிலுக்குள்ளால் நடந்துகொண்டிருந்தார்கள். வியர்வை ஆடையில் தங்க இடமில்லாமல் ஆடையிலிருந்து வழிந்துகொண்டிருந்தது.

இத்தனை துயர்களுக்குள்ளாலும் தன் தோழர்களுடன் நடந்துகொண்டிருந்த சிற்றம்பலம், இடையில் பாரத்தின் சுமையும் உடலின் வேதனையும் தாக்க அவனது கரங்கள் நிலத்தைத்தொட்டு விட்டன. அவன் எழ முயற்சித்துக்கொண்டிருந்தான். ஆனால் — ஆனால் அது அவனால் முடியவில்லை. ''கையை குடுங்கோடா மச்சான் என்னால எழும்பேலாமக் கிடக்கு'' என்றவன் தோழர்களின் உதவியுடன் மெல்ல எழுந்து ஒவ்வொரு அடியாக எடுத்தெடுத்து வைத்தான். உடலால் வழிந்த வியர்வையும் கண்களால் வழிந்த நீரும் அவன் போகும் வழியின் தடங்களாகக் கிடந்தது.

தாகத்தால் வரண்ட நா தண்ணி கேட்க அவனையறியாமலே அவனது கைகள் இடுப்பிலிருந்த தண்ணீர்க்கானைத் தடவியது ஆனால் தண்ணீர் முடிந்து நீண்டநேரமாகி விட்டதை அவன் உணர்ந்துகொண்டு மௌனமாக நடந்துகொண்டிருந்தான்.

''இலக்குக்கு கிட்ட வந்திட்டம் மச்சான்'' அந்தக்குரலினால் காய்ந்து வரண்டு போயிருந்த முகங்களில் இனம் புரியாத புத்துணர்ச்சி. நீண்ட பயணத்தின் முடிவில் கிடைக்கப்போகும் அந்த வெற்றிச்செய்தி.

சீனன்குடா விமானத்தளத்தின் எல்லை. எல்லோரும் ஒன்றுகூடி திட்டத்தை மீள் நினைவு படுத்திக்கொண்டு தாக்குதலுக்காய் நகர்ந்தார்கள். அரண்களை உடைத்தபடி கரும்புலி வேங்கைகள் ஆவேசத்துடன் உட்புகுந்தார்கள் அவர்கள் ஓடிச்செல்ல முயற்சித்தாலும் உடலின் களைப்பு அவர்களைத் தடுத்துக்கொண்டிருந்தது. ஆனாலும் கண்களுக்குத் தெரிந்த விமானம் நோக்கி ஓடினார்கள். சிற்றம்பலம் தன் கால்களை மடித்து நிலத்தில் நிலையெடுத்து தோளில் லோவை வைத்து இலக்கை தன் ஆயுதத்தின் குறிகாட்டியுடன் இணைத்துக்கொண்டான். அவன் சுடுவதற்குத் தயாரானான். ஆனால் அதற்குள் எதிரியின் துப்பாக்கி ரவை அவன் உடலைத்தாக்க அந்த மண் சிவத்துக்கொண்டிருந்தது.

அவன் மீண்டும் தன் எஞ்சிய சக்திகளை ஒன்றிணைத்து தன் ஆயுதத்தை இலக்குடன் இணைத்துக்கொண்டான். ஆனால் இப்போதும் அவனைத் துளைத்தன துப்பாக்கிச்சன்னங்கள். ஆனாலும் அவன் விசைவில்லை அழுத்தினான். அவன் கைகள் சோர்ந்தன. தன் உடல் இயக்கம் அற்றுப் போவதை அவன் உணர்ந்து கொண்டான்.

மெல்லச் சரிந்த அவனை அணைத்துத் தூக்க தோழர்கள் நெருங்கினார்கள். அவன் கையால் அவர்களை நெருங்கவிடாமல் தடுத்துக்கொண்டிருந்தான். அவனது மார்பில் இருந்த வெடிமருந்துப் பொதியின் விசைவில்லை அழுத்தினான் அவனது நெஞ்சிலிருந்து எழுந்த பிளிறலுடன் கூடிய அதிர்வு அவன் தன் தோழர்களை விட்டுப்பிரிந்துவிட்டான்.

''வெள்ளம் வந்தா அணையை வெள்ளம் வாற இடத்திலதான் கட்ட வேணும். வீட்டைச் சுத்திக் கட்டக்கூடாது'' இது அவனது வார்த்தைகளல்ல, வாதங்களல்ல. இதுவே அவனது வாழ்க்கை ஏனெனில் அந்த வருடத்தின் முதல் மாதத்தில் தன் தாயை இழந்து அந்தச் சோகம் மறையுமுன் மாசியில் தந்தையை இழந்த பின்னும் அடுத்து வந்த 25 நாட்களுக்குள் அவனால் அதைச் செய்ய முடிந்ததென்றால் அவன் உச்சரித்தவை வெறும் வார்த்தைகளோ வாதங்களோ அல்லவே!

O

---

(05 ம் பக்கத் தொடர்ச்சி)

## புலிகளின்...

முழு அளவிலான போரின் விரிவாக்கமாக புலிகள் ஓயாத அலைகள் - 03 மீட்புச்சமரை நடத்தியபோது ஸ்ரீலங்கா இராணுவத்தின் படைவலு சிதைவடைந்தது. இராணுவ ஆளணியில் பெரும் வீழ்ச்சியேற்பட்டதோடு படைத்துருப்பினர்கள் தாக்கும் மனநிலை இழந்தவர்களானார்கள். படைத்தலைமையால் ஒரு தாக்குபலத்தைக்கொண்ட அணிகளாக அவற்றை மீளொழுங்குபடுத்த முடியாமலேயே இருந்தது. புலிகளால் மீட்கப்பட்ட பரந்துபட்ட நிலப்பரப்பை மீளக் கைப்பற்றும் முயற்சியிற்கூட படைத்தரப்பால் ஈடுபட முடியவில்லை. பின், தென்மராட்சியில் ஒரு புறப்படு தளப்பிரதேசத்தை புலிகள் ஏற்படுத்திக் கொண்டதோடு நிறுத்தப்பட்ட ஓயாத அலைகள் - 03ஆன முடிவுநாளிலிருந்து ஐந்து மாதகாலமாக தனது திரட்டக்கூடிய படைவலுவைக்கொண்டு. புதிய ஆயுத பலத்தோடுசெய்த பல இராணுவ நடவடிக்கைகளையும் இராணுவத்தால் அத்தளப்பகுதியை மீளக்கைப்பற்ற முடியாமல் போனது. அவையெல்லாமே இலக்கில் வெற்றியிட்ட முடியாத நடவடிக்கைகளாகவே முடிவடைந்தன. யாழ்ப்பாணத்தின் ஆக்கிரமிப்பிற்கு உடனடி அச்சுறுத்தலான புலிகளின் இத்தளப்பகுதியை இல்லாதொழிப்பதற்கான அந்நடவடிக்கைகள் வெற்றியடையாததோடு பெரும ஆளணி இழப்பையும் சந்திக்க நேர்ந்தது. ஆனால், தனது பலவீனத்தை நிரப்பிட்டிருக்கு புலிகளின் ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்த அறிவிப்பை சாதகமாக்கி தனது இலக்கை வெற்றியிட்ட இராணுவம் முடிவுசெய்தது.

ஓயாத அலைகள் - 03 ஐத் தொடர்ந்த காலப்பகுதியில் இராணுவ ரீதியில் புலிகளே தொடர்ந்தும் முன்னேறும் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கான வாய்ப்பையும், வலுவையும் கொண்டிருந்தனர். அரச படைகளோ முற்றுமுழுதாகவே ஒரு தற்காப்பு நிலைக்குள் தள்ளப்பட்டிருந்தன. தாக்குதல் அச்சுறுத்தலை எதிர்கொள்ள வேண்டியவர்களாக படைத்தரப்பே இருந்தது. வடக்கில் இராணுவத்தின் அனைத்து நிலைகளும் தாக்குதல் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருந்தன. எனவே, இராணுவம் தனது வலுவை, தாக்குதலுக்கு முகம் கொடுக்கக்கூடிய வகையில் தற்காப்புச் சமரில் பயன்படுத்தவேண்டியதாய் இருந்தது. அதிலும் குறிப்பாக, யாழ்ப்பாணம் புலிகளின் அரசியல் இராணுவ இலக்காக இருக்கும் என்பதாலும், புலிகளின் யுத்த வியூகத்தாலும் யாழ்ப்பாணத்தில் இராணுவ நிலைகளே பெருமளவு தாக்குதல் அச்சுறுத்தலை எதிர்கொள்ளவேண்டியிருக்கிறது என இராணுவம் விளங்கியிருந்தது.

அரியாலை, கொழும்புத்துறை, கோப்பாய், கனகம்புளியடி, புத்தூர், சாவகச்சேரி மற்றும் கிளாலி, எழுதுமட்டுவாள், நாகர்கோவில் என்பவற்றுடன் யாழ்ப்பாணத்தின் கரையோரப் பிரதேசங்கள் என்பனவும் புலிகளின் முன்னேற்றம் அமைவதற்கான வாய்ப்புள்ளதாக படைத்தரப்பு உறுதி செய்திருந்தது. எனவே தனது சொற்ப படைவலுவையும் நீண்ட பரந்த பிரதேசத்தில் செறிவற்றவாறு துண்டாடப்பட்டதாக நிலைகொள்ள வைக்கவேண்டிய நிர்ப்பந்தம் படைத்தரப்பிற்கு இருந்தது இருக்கும் படைவலுவை ஒருங்கிணைக்க முடியாதவாறு புலிகளின் தாக்குதல் அச்சுறுத்தல் சிங்களப் படையை முடக்கிவைத்திருந்தது; ஆனால், புலிகள் ஒருதலைப்பட்சமாக யுத்தநிறுத்தத்தை கடைப்பிடிக்கப்போவதாக அறிவித்ததும் இராணுவத்திற்கிருந்த தாக்குதல் அச்சுறுத்தல் நிச்சயப்படுத்தப்பட்ட வகையில் இல்லாது போயிற்று, இதனை வாய்ப்பாக பயன்படுத்தி, படைவலுவை ஒருங்கிணைத்து முன்னேற்ற நடவடிக்கையில் ஈடுபடத் தொடங்கியது அரச படைத்தரப்பு.

அரசின் கீழ்த்தரமான நாகரீகமற்ற இராணுவத் தந்திரத்தினால் புலிகள் தமது அனைத்து பகுதிகளிலும் தாக்குதல் அச்சுறுத்தலுக்கு உள்ளாகவேண்டிய நேர் எதிர்மாறான புதிய சூழல் தோன்றியது. புலிகளால் முறியடிப்பிற்கான ஒரு படை ஒருங்கிணைப்பை செய்யவோ, பிறிதொரு களமுனையைத் திறந்து சிங்களப் படையை திணறடிக்கவோ முடியாத சூழலில், இராணுவத்தின் யாழ்ப்பாண ஆக்கிரமிப்பு நிலைகொள்ளலுக்கு அச்சுறுத்தலாக புலிகளால் தென்மராட்சிப் பகுதியில் தக்கவைக்கப்பட்டிருந்த புறப்படு தளம் மீது இராணுவம் படை நடவடிக்கையை செய்யத் தொடங்கியது இத்தகைய நயவஞ்சகமான தந்திரத்தால் புலிகள் கைதடி, நாவற்குழி, தனங்கிளப்பு பிரதேசத்தில் இருந்து ஒரு தந்திரோபாய படை பின்வாங்கலை செய்ய வேண்டியதாயிற்று.

நாகரீகமற்ற அரசு இச்செயல் மூலம் யாழ்ப்பாண ஆக்கிரமிப்பிற்கான அச்சுறுத்தலை தவிர்க்கவும், சிதைக்கப்பட்ட படைத்துருப்புக்களின் மனோதிடத்தை மேம்படுத்தவும், சிங்கள தேசத்தில் தனது இராணுவம் இப்பொழுதும் வலிமையுடன் இருப்பதாக காட்டவும், சர்வதேசத்திற்கு தான் இராணுவ சமநிலையில் தனக்குரிய பலத்தை இழந்துவிடவில்லை என்ற தோற்றப்பாட்டை உருவாக்கவும் இதனைப் பயன்படுத்தியிருக்கிறது.

எமது நல்லெண்ண சமிக்கைகள் யுத்தவாதிகளால் எவ்வாறு கையாளப்பட்டிருக்கிறது என்பதை அனைத்துத்தரப்பும் இதிலிருந்துதான் புரிந்துகொள்ள வேண்டும். சமாதானம் பற்றிய பேச்சுக்கள் சந்திரிகா அரசாங்கத்தைப் பொறுத்தவரை ஒரு சாணக்கிய மொழிவிரிப்பாகவே பயன்படுத்தப்படுகிறது என்பதையும் புரிந்துகொள்ளவேண்டும். பௌத்தசிங்கள பேரினவாத கோட்பாட்டு அடிப்படையிலான இத்தகைய குருட்டுத்தனமான அணுகுமுறைச் சிந்தனையிலிருந்து சிங்கள அரசு மாறிவிடப்போவதில்லை என்பதை சர்வதேச சமூகத்திற்கு அது மீண்டும் வலுவாக மெய்ப்பித்திருக்கிறது. ஸ்ரீலங்கா அரசு புலிகள் பற்றியும், விடுதலைப்போராட்டம் பற்றியும் தனது வலுவான பிரச்சார முனைப்புக்களால் சாதித்துவந்த பொய்மையையும், தமிழர் மீதான இராணுவ மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதையே இனப்பிரச்சனைத் தீர்வாக எண்ணும் சிங்கள அரசினது எண்ணப்போக்கின் மெய்மையையும் சர்வதேச சமூகத்திற்கு தோலுரித்துக்காட்ட செலுத்தப்படவேண்டிய விலையாகவே இந்தப் படைப்பின்வாங்கல் அமைந்துபோயிற்று.

O

# எம் விடுதலையைப் பாடியபடி காற்று வரட்டும் மழை வரட்டும் உலகநாடுகள் ஓடிவரட்டும்

உலைக்களம்

- வியாசன்

எங்கிருந்தோ ஒரு புண்ணியவாளன்
எம் வாசலுக்கு வந்துள்ளார்.
மீண்டும் எம் கதவுகள் தட்டப்படுகிறது.
அழைப்புமணிச் சத்தத்தில் எத்தனை ஆனந்தம்.
வாசல்வர யாருமற்றிருந்ததால்
தூசி படிந்துள்ளது தூமணிக்மாடம்.
எண்ணற்ற பூட்டும், பிணைச்சலும்
இறுகிக் கிடக்கிறது.
ஆயினும் எம் மனங்களைப் போல
கதவுகளை அகலத் திறக்கின்றோம்.
கோலம் விசாரிக்க வருவோரில்லாததால்
கோலமற்றுப்போனது எம் முற்றம்.
காற்று வரட்டும்
எம் விடுதலையைப் பாடியபடி.
விடுதலைக்கு வீரியம் கொடுத்தபடி
மழை வரட்டும்.
எம் ஜீவனின் இசையைக் கூவிக்கொண்டு
குயில்கள் வரட்டும்.
நாமிழந்த வாழ்வின் கீதத்தை முணுமுணுத்தபடி
உலக நதிகள் ஓடிவரட்டும்.
எம் ஆத்மாவின் ராகத்தை ஒலித்தபடி
ஐந்து கண்டங்களும்
அவற்றைச் சூழ்ந்த சமுத்திரங்களும் வரட்டும்.
வருக நண்பரே!
எரிக் சொல்ஹெய்ம்.
உச்சரிக்கும் போதே உதடுகள் நன்றி சொல்கிறது.
பனிவிழும் தேசத்து மனிதருக்கு எம்பணிவு.
அனல் தகிக்கும் வனத்திடை வந்த அன்புக்கு
ஆயிரம் வணக்கங்கள்.
நோர்வே தேசமே!
உன்னை நெஞ்சார வாழ்த்துகிறோம்.
நீல்விதானமே நெருப்பிற்குளிக்க
நேற்றுவரை வானப்பிசாசுகள் வந்து போயின.
குண்டள்ளிச் சொரிந்து குதூகலித்தன.
தூரத்தே பீரங்கிவாய் துடித்தலற
துப்பித் தொலைத்தன எறிகணைகள்.
உங்கள் வரவறிந்து போலும்
இவையெல்லாம் வாயடைத்துப் போயின.
நாம் பட்டதுயருக்குப் பட்டியல் தேவையில்லை
''ஒஸ்லோ'' வீதிகளிற் திரியும்
ஒரு தமிழனைக் கேளுங்கள்.
தன் காலங்கள் தப்பிப்பிழைக்க ஓடிய கதைசொல்வான்.
தொப்பிள் கொடிசுற்றாத தூங்கிய கருவறையை
குண்டுகள் பிளந்த கொடூரம் கூறுவான்.
உடன் பிறப்பை ஒநாய்கள் பிடித்தெகிக்
கடித்துக் குதறிய கதைசொல்லுவான்.
கண்முன்னால் எங்கள் வாழ்வு மிதப்பதை
புலம்பெயர்ந்து போன பிள்ளைகளிடம் கேளுங்கள்.
இங்கே பாதையோரத்தில் கிடக்கும்
பட்டினி வயிறுகளைக் கேளுங்கள்.
சிங்களக் குடிகளை வாசலிற் தொங்கும்
தூக்கு முடிச்சு ஒவ்வொன்றும்
எம் துயரம் சொல்லும்.
எழுந்து நின்று சத்தியம் செய்கின்றோம்.
இதற்காகவும் பின்பும்
சமாதானத்துக்கு நாங்கள் சாட்சிகளாகின்றோம்.
பேச்சுவார்த்தை மேசைக்குப் போக வேண்டுமா?
அதற்கு முன் நாங்கள் ஆயுதம்
''உங்கள் பக்கத்தில் நீதியுள்ளது'' என்று
ஒரேயொரு உத்தரவாதம் தாருங்கள்.
எங்கள் கையிருந்து பறிக்கப்பட்ட வாழ்வை
எமக்குப் பெற்றுத் தாருங்கள்.
எங்கள் காலாற நடந்த ஊர்களை
எமக்கு மீட்டுத்தாருங்கள்.
எவரின் வாசலுக்கும் சென்று யாசிக்காத நிமிர்வை
எமக்கு வழங்குங்கள்.
இங்கு வீசும் காற்று எமக்கானதாய்,
பாடும் குருவிகள் எமக்கானதாய்,
பூக்கும் மலர்கள் எமக்கானதாய்,
விளையும் வயல்களும்,
அசையும் நதிகளும் எமக்கானதாய்,
எல்லாம் எமதான வாழ்வைப் பெற்றுத்தாருங்கள்.
நாம் நாமாக வாழ்வோமென்னும் நம்பிக்கையை
முதலில் எமக்கு வழங்கச் சொல்லுங்கள்.
நாம் பல்லக்குத்தூக்கிகள் என்ற நினைப்பை
அவர்களை மாற்றச் சொல்லுங்கள்.
ஈழத்தமிழர் ஏதோ இழிபிறப்பென்ற
ஆழப்படிமத்தை அகற்றச்சொல்லுங்கள்.
நாங்கள் கூண்டுப் பறவைகள் அல்ல.
அடையாள அட்டை சுமக்கும் அந்நியரல்ல.
கொல்லவும்,
கொன்று புதைக்கவும்,
வழியிற் பிடிக்கவும்,
வல்லுறவில் வதைக்கவும்
எமக்கெழுதிய விதியை அழிக்கச்சொல்லுங்கள்.
இது எம் தாயின் மடி.
எம்மைக் கர்ப்பத்தில் சுமந்த கருக்குழி.
இந்த மண்ணின் ஒவ்வொரு துகள்களிலும்
எம் முந்தையரின் மூச்சுப் படிந்துள்ளது.
இங்கு விளைந்த மரங்கள் ஒவ்வொன்றிலும்
எம் பரம்பரையின் குருதி செறிந்துள்ளது.
ஓடி வருகின்ற உலக நதிகளே!
நீங்களே முன்னின்று நீதி வழங்குங்கள்.
அவர்களின் பூமியில் ஒரு அங்குலமாயினும்
எமக்கு வேண்டாம்.
அவர்களின் உரிமத்தில் ஒரு துகளாவேனும்
எமக்கு வேண்டாம்.
எமக்கானதை மட்டுமே கேட்கின்றோம்
தருவதில் அவர்களுக்கென்ன தயக்கம்?
ஒண்டைக்கும் சமாதானத்துக்குமான இடைவெளி
ஒரு நூலிழைதான்.
நண்பர்களாகப் பேசலாம்
அல்லது பகைவர்களாகப் போரிடலாம்.
ஒன்று கைகுலுக்குவதில் தொடங்கும்
மற்றொன்று கலசம் தரிப்பதில் ஆரம்பமாகும்.
நெருப்பில் குளிக்கொண்டவர்களை
நெருப்பென்ன செய்யும்?
நண்பரே!
அத்தினாபுரத்துக்குத் தூது போனான் அனந்தசயனன்.
ஒன்றுமே கிட்டவில்லை.
யுத்தத்துக்குத் தேதிகுறித்தான் யுவராஜன்.
குருஷேத்திரத்தில்
அதர்மம் தலைகவிழ தர்மம் தலைநிமிர்த்தியது.
மீண்டுமிந்த வரலாறு முளைக்க வேண்டுமா?
வேண்டாம் ஐயனே!
நாங்கள் பேசவே விரும்புகின்றோம்.
உங்களின் முன்னிலையில்.

(12 ம் பக்கத் தொடர்ச்சி)

அதிர்ச்சி அலைகளை அமெரிக்க தரப்பிலும், அமெரிக்க மக்கள் மத்தியிலும் ஏற்படுத்தியது. இதனால் இரண்டு மாதகால சுழிவிரக்க சிந்தனையின் பின் தாமாகவே பேச்சுவார்த்தைக்கு முன் வந்த ஜோன்சன் விமானக்குண்டு வீச்சினை மட்டுப்படுத்தினார். அதேவேளை பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தி சற்று ஓய்ந்திருந்த வடவியட்னாம் தரப்பும் சகலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்திய பேச்சுவார்த்தைகளுக்கு தாம் தயார் எனகிற முடிவினை அறிவித்தனர். இவ்வாறாகத் தான் பேச்சுக்கள் பரிசில் 13 மே 1968ல் தொடங்கின. ஆனால் தொடக்கமே பெரும் சிக்கலில் சிக்கியது. யார் யார் பேச்சுக்களில் பங்கு பற்றுவது என்பதிலிருந்து பேச்சு வார்த்தை மேசை எவ்வாறு அமைய வேண்டும் என்பதுவரை பெரும் இழுபறி. அப்போது அமெரிக்க சனாதிபதி தேர்தல் காலம். தனது கட்சி வேட்பாளர் நிக்சனை வெல்ல வைக்க ஜோன்சன் முயல, அவரது காலம் முடியுமுன்னர் பெறக்கூடியதை அவரிடமிருந்து பெற வடவியட்னாம் தரப்பு முயல, இராசதந்திர முனைப்புக்கள் தீவிரம்பெற்றன. இதேவேளை அமெரிக்கா தன்னை கைகழுவி விடுமோ என வருந்திய தென் வியட்னாமிய பிரதம அமைச்சர் நிகுயென் வான்தியூ *'அவமானம்' 'துரோகம்' 'தோல்வி'* என அலறி ஜோன்சனுக்கு பெரும் எரிச்சலை ஊட்டினார். அதேவேளை அமெரிக்கப் படை விலக வேண்டும் என்கிற முடிவில் உறுதியாக விடுதலைப் போராளிகள் நின்றனர். இவ்வாறாக எதுவித முடிவுமின்றி இக்காலகட்ட இழுபறி முடிவிற்கு வந்தது.

அடுத்ததும் நீர்க்கமானதும் இறுதியுமான காலகட்டம் 1969 இல் நிக்சனும் அவரது ஆலோசகரான கென்றி கிசிங்கரும் பதவியேற்போடு ஆரம்பமாகியது. ஜோன்சனால் செய்ய முடியாததை தம்மால் செய்ய முடியும் என நிக்சன் கூறிக்கொண்டார். கிசிங்கரோ இராசதந்திர முயற்சிகளில் வெகு தீவிரமாக செயற்பட்டு தமது இலக்கினை அதாவது படைவிலகல், தென்வியட்னாமிய சுதந்திரம் பாதுகாக்கப்படல் என்பதனை *அமைதிப் பேச்சுக்கள் என்கிற போர்வையில் அடைய முடியும்* என நம்பி கௌரவத்துடன் அமைதி எனக் கூறிக்கொண்டார் பாரிய அழுத்தங்களை B 52 விமானக் குண்டு வீச்சுக்களின் மூலமும் 1970 இல் கம்போடியா மீதான படையெடுப்பின் மூலம் தொடுத்தவண்ணம் இரகசியப் *பேச்சுக்களை* வியட்னாம் தரப்போடு ஆரம்பித்தார் *பேச்சுக்களில் ஈடுபட்டும் அதனை இடைநிறுத்தியும் வெளியேறியும்* பரிசில் வியட்னாம் தரப்பு இத்தகைய அழுத்தங்களை பயனற்றதாக்கியது. இதேவேளை தொடர்ந்து ஈடுபடுவதன் மூலம் (பரிசில் தங்கியிருந்த வியட்னாம் தரப்பு தாம் எத்தனை காலமானாலும் பேச்சுக்களில் ஈடுபடத்தயார் என கூறியிருந்தனர்) அமெரிக்காவில் வியட்னாம் போருக்கெதிரான எதிர்ப்பு வலுக்கவும் வழிவகுத்தனர். அப்போதைய கருத்துக்கணிப்பொன்று வியட்னாமுக்கு படையனுப்பியது தவறு என 71 விழுக்காட்டினர் கருதியதாக தெரிவித்தது.

இவ்வாறாக 1971 வரை *''ஆரியக் கூத்தாடி''*ப் பார்த்தும் கிசிங்கரினால் தனது அரசியல இராசதந்திர அணுகுமுறையால் எதனையும் பெறமுடியவில்லை. இக்கட்டத்திலே 1972ம் ஆண்டு மார்ச்சில் *''ஈஸ்டர் தாக்குதல்''* எனப்படும் பாரிய தாக்குதலொன்றை வடவியட்னாம் தரப்பு தென்வியட்னாம் மீது தொடுத்து சைகோனுக்கு 60 மைல் தூரம்வரை உட்புகுந்தது. இதற்கு பதிலடியாகத்தான் உலகமே அதிர்ந்து போன *பேரளவிலான தொடர் குண்டு வீச்சுக்களை* அமெரிக்கா 1972 மேயிலிருந்து ஒக்டோபர் வரையும் (Line Backer - லைன் பைக்கர்) டிசம்பரிலும் (லைன் பைக்கர் II ' கிறிஸ்மஸ் குண்டு வீச்சுக்கள்'') நிகழ்த்தி வடவியட்னாமில் பெருத்த அழிவுகளை ஏற்படுத்தியது. வட வியட்னாமின் கைபொங் துறைமுகத்தை சூழ கடற்கண்ணிகளை விதைத்து கடல் முற்றுகையிட்டது. அமெரிக்கத் தரப்பின் மூர்க்கத்தனமான இராசதந்திரத்தின் வெளிப்பாடான இக்குண்டு வீச்சுக்கள அமெரிக்காவின் கறைபடிந்த காலமாகியது. பேச்சுக்களுக்கு வடவியட்னாமை தள்ளி மோசமானதொரு உடன்பாட்டினை திணித்து தனது படைகளை மீளப்பெற அமெரிக்கா துடியாய்த்துடித்தது. இக்காலகட்ட செயற்பாடுகளை கென்றி கிசிங்கர் யுகுலர் இராசதந்திரம் என்றார் (Jugular Diplomacy- மூளையிலிருந்து இருதயத்திற்கு குருதியை கொண்டு செல்லும் பிரதான நாளம் யுகுலர் எனப்படும்) ஈற்றில் ஒருவாறாக இரு தரப்பும் தமது நிலைகளிலிருந்து இறங்கிவந்து *'பாரிசு உடன்படிக்கை'* எனப்படும் உடன்பாட்டிற்கு *1973 சனவரியில்* வந்தனர். அமெரிக்க கைதிகளை விடுவிக்கவும் அமெரிக்கப் படைகள் வெளியேறவும். அதேவேளை வடவியட்னாம் துருப்புக்கள் ஒரு தொகை தென் வியட்னாமிலிருக்கவும் வியட்நாம் தேசிய விடுதலை முன்னணிக்கு அரசியல் அங்கீகாரம் வழங்கவும் வழிசெய்த இவ்வுடன்பாடு போருக்கு பிரதான காரணமான தென்வியட்னாம் எதிர்காலம்பற்றிய முடிவினை தள்ளிப் போட்டது.

இப்போது கிசிங்கருக்கு பெருத்த புகழாரம் சூட்டப்பட்டது. 'விண்ணாதி விண்ணன்' எனப் பாராட்டும் கிடைத்தது. அவருக்கும் 1969 இல இருந்து வியட்னாம் பிரதிநிதியாக பேச்சுக்களில் ஈடுபட்ட லீடக் தோ (Leedak Tho) விற்கும் நோபெல் அமைதிக்கான விருதும் கிட்டியது. ஆனால் அமைதி *இன்னமும் கிட்டவில்லை எனக்கூறி பரிசைப் பெற மறுத்த* தோ தனது தாயகத்திற்கு திரும்பிவிட்டார்.

ஆனால் அமைதிக்கனவு நீடிக்கவில்லை. தென்வியட்னாம் உடன்பாடு நிறைவேற *ஒத்துழைக்கவில்லை* வடவியட்னாமோ தனது இலக்கினை *கைவிடவுமில்லை* 1973 டிசம்பர் அளவில உடன்பாட்டினை நிறைவேற்ற முடியாத நிலை தோன்றியது. அதிருப்தி அடைந்த அமெரிக்க செனெற் தென்வியட்னாமிற்கான நிதியுதவியை வெட்டித்தள்ளியது. ''வோட்டர் கேற் மோசடியால்'' அவமானமுற்ற நிக்சன் பதவி விலக, 1975ல் போட் சனாதிபதியானபோது நிலைமைகள் தலைகீழானது 1975 சனவரியில பாரிய மரபுவழி படையெடுப்பினை தொடங்கிய விடுதலையணி 1975 ஏப்ரலில் 30ம் திகதியளவில் கடைசி அமெரிக்கப்படையை ஓட ஓட விரட்டியது. தனது இலக்கினை (1965ல் வெளியிட்ட வண்ணம்) அடைந்தது *10 வருடங்களாக இருதரப்புமே வெகு கவனமாக* தமது *இராசதந்திர, அரசியல், இராணுவ நிலைப்பாடுகளை வரையறுத்து செயற்பட்டனர். முடிவில் வியட்னாமில் அமைதி இராணுவ வழியில், விடுதலைப் போராட்டத்தின், ஆயுதப்போராட்டத்தின் வெற்றியிலே கிட்டியது.*

○

ஆதாரம்-: வியட்னாம் போரின் கலைக்களஞ்சியம்

(04ம் பக்கத் தொடர்ச்சி)

## நிழல்...

*வெடிபொருட்கள் பற்றிய நிபுணத்துவ பயிற்சிகளைப் பெற்றிருப்பினும்கூட அபாயகரமான இந்தப் பணியை தேசத்திற்கான கடமையாக செயற்படுத்தி வரும் இவர்களின் அபாரமுயற்சி பாராட்டுக்குரியது. மக்களுக்கான இப்பணியின்போது தமது உயிரைத் தியாகம் செய்த பணியாளர்கள் இருவரும் மற்றும் அங்கவீனமடைந்தோரும் என்றும் எம்மக்களின் நினைவுக்கும், நன்றிக்கும் உரியவர்கள்.*

*இன்று மக்கள் மீளக்குடியேறுவதற்காக தம் சொந்த நிலங்களை நோக்கிச் செல்கின்றனர் தமது மீள்குடியேற்றப் பகுதியில் அமைந்துள்ள வெண்புறா தொடர்பகத்தை நாடுகின்றனர். தமது பிரதேசத்தில் காணப்படும் வெடிபொருட்கள் பற்றிய அபாயத்தை கேட்டு அறிகின்றனர். மக்கள் குடியேற விரும்பும் இடங்களில் கண்ணிவெடி அபாயம் காணப்படும் பட்சத்தில் வெண்புறா கண்ணிவெடி அகற்றும் பணியாளர்கள் சேவைக்கு அழைக்கப்படுகின்றனர். கண்ணிவெடி அகற்றும் பணியாளர்களால் பிரதேசம் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு உறுதி செய்யப்பட்ட பின்னர் மக்கள் மீள்குடியேறுகின்றனர் இவை இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட எம் பிரதேசங்களில் நாம் காணும் காட்சிகள்.*

*ஆக சர்வதேச தொண்டர் நிறுவனங்களால்கூட மீள்குடியேறும் நிலங்களில் எம் மக்களின் வாழ்விற்கான கோரிக்கைகள், நிறைவு செய்யப்படாத நிலையில், அடக்குமுறையாளர்களிடமிருந்து எதையுமே எதிர்பார்க்க முடியாத சூழலில். இன்று தாமாகவே கட்டியெழுப்பிவிட்ட மக்கள் அமைப்புக்கள் மூலம் எம்மக்கள் தம் தேசத்தில் தமது வாழ்விற்கான தடைகளை நீக்கத் தொடங்கிவிட்டனர். இதுவே விடுதலைக்காக போராடும் மக்களின் செயற்பண்பு ஆகும்.*

○

(03ம் பக்கத் தொடர்ச்சி)

## புலிகளின் போர்...

கடந்த *50* வருடகால இலங்கைத் தீவின் அரசியல் வரலாற்றை எடுத்துக்கொண்டால் தமிழரின் இனப் பிரச்சனைக்தீர்வுக்காக சிங்கள அரசும் - தமிழர் தரப்பும் செய்து கொண்ட உடன்படிக்கைகளை- நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளை செல்லாக்காசாக்கியது சிங்கள அரசே என்ற உண்மை தெரியவரும். பண்டா-செல்வா ஒப்பந்தத்திலிருந்து யாழ்ப்பாணப் பேச்சுவார்த்தை வரை இந்த அரசியல் உண்மையைக் காணலாம்.

ஆயினும், 'அங்கீகரிக்கப்பட்ட அரசு' என்ற அரசியல் சலுகையை வைத்துக்கொண்டு சிங்கள அரசு, ஒவ்வொருகடவையும் தனது அமைதிக்கெதிரான செயற்பாட்டை நியாயப்படுத்துவதுடன் - அரசியல் தீர்வை எட்டமுடியாததற்கான பொறுப்பை தமிழர்தரப்பு மீது அபாண்டமாகச் சுமத்தியும் வருகின்றது.

சிங்கள அரசின் அநீதியான இந்த அரசியல் பரப்புரையை சர்வதேச உலகமும் அனுதாபக்கண்ணுடன் செவிமடுத்துவருவது துரதிஸ்டவசமானது.

இந்தநிலையில் தமிழ் - சிங்கள இனமுரண்பாடு பற்றிய சர்வதேசத்தின் நோக்குநிலையில் மாற்றம் ஏற்படவேண்டும் என்பதே ஈழத்தமிழர்களின் எதிர்பார்ப்பாகும்.

''ஈழத்தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை ஏற்றுக்கொண்டு - அமைதிவழியில் - நீதியானமுறையில் ஒரு அரசியல் தீர்வை சிங்கள அரசு வழங்கும் என நாம் நம்பவில்லை''. என்ற தலைவர் பிரபாகரனின் தீர்க்கதரிசனமான கருத்தை சர்வதேச சமூகமும் புரிந்துகொள்ளவேண்டிய தருணம் வந்துவிட்டது.

○

# "போரிடுங்கள் பேசுங்கள், பேசுங்கள் போரிடுங்கள்"

இது பேச்சுவார்த்தைக் காலம். பேச்சுவார்த்தைகள் பற்றிய பேச்சுக்களாலே காலம் கழியும் காலம். பலவேறுதரப்பட்டவர்களுக்கிடையில், பல்வேறு நிலைகளில், பலவேறு வடிவங்களில் பேச்சுக்கள் நடக்கின்றன. முன்னொரு காலத்திலே பெரும் பகைவர்களாகவிருந்த நாடுகளான அமெரிக்கா-வியட்னாம், அமெரிக்கா - வடகொரியா, வடகொரியா - தென்கொரியா, ஈரான் - மேற்குலகம், லிபியா - மேற்குலகம், எல்லாமே பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளன. போகிற போக்கில் இந்தியா - பாக்கிஸ்தான், சீனா - தைவான் ஆகியனவையும் பேச்சுக்களில் ஈடுபட்டாலும் அதிசயப்படுவதற்கில்லை. தென்னமெரிக்காவில் மெக்சிகோ, கொலம்பியா, குவாத்தமாலா போன்ற நாடுகளில் போராட்ட அமைப்புக்களோடு நடக்கும் பேச்சுக்கள்; ஆபிரிக்காவில் சியராலியோன், அங்கோலா, கொங்கோ போன்ற நாடுகளில் கிளர்ச்சி இனக் குழுக்களோடு நடக்கும் பேச்சுக்கள்; அண்மையில் பெரும்போர் மூண்ட எதியோப்பியா - எரித்திரியாவிற்குமிடையில் அமெரிக்க ஏற்பாட்டில் நடக்கும் பேச்சுக்கள்; இவற்றினைவிட இடைவிடாது வட அயர்லாந்து, பாலத்தீனம் பற்றி நடக்கும் சருவதேச மட்டப் பேச்சுக்கள்; இவ்வாறாக எங்கும் பேச்சுவார்த்தைகள்.

பேச்சுவார்த்தைக் காலமாக இக்காலம் மாறியமைக்கான காரணங்களை ஆராய்வது எமது நோக்கமல்ல. என்றாலும் சில காரணங்களை பின்வருமாறு பட்டியலிட முடியும். சோவியத் சாம்ராச்சியம் சிதற - பனிப்போர் உருக - பொருண்மியம் உலகமயமாக - தகவல் தொழில் நுட்பம் பெரும் பாய்ச்சல் நிகழ்த்த - ஐநாவை துணைக்கழைத்து அமெரிக்கா அமைதி முகம் காட்ட என பல காரணங்கள். இவை மட்டும் தானா காரணங்கள்? இவை புறக்காரணிகள். ஆனால் அகக்காரணியொன்றுமுண்டு. சகல விடுதலைப் போராட்ட வடிவங்களிலும் அதற்கெதிரான அமைவுகளிலும் பொதிந்துள்ள பொதுப்பண்பிது. இருவேறு முரண்பட்ட இலக்குகளைக் கொண்ட இருதரப்புமே தமது இலக்கினை அல்லது இலக்குநோக்கிய பயணத்தில் முன்னேற்றத்தினை இராசதந்திரம், அரசியல் பேச்சுக்கள் என்பவை மூலம் அடையமுடியுமா என முயன்று பார்க்கின்றமை இப்பண்பு. போரின் நோக்கம் பற்றி படைத்துறை வல்லுநரான கார்ள் வொன் குலோசுவிட்சு கூறியதை இங்கு தொடர்புபடுத்துகின்றோம் "போர் என்பது மாற்று வழியில் தொடரப்படும் அரசியலின் நீட்சியைத் தவிர வேறில்லை" ("War is nothing more than continuation of politics by other mean"). எனவே ஒன்றாகத் தொடங்கி இரு கிளைகளாகப் பிரிந்து மீண்டும் ஒன்று சேர்ந்து செல்லுமிடத்தை அடையும் பாதையிது. ஆனால் இப்பாதையில் சென்று வழிதவறியோர் எத்தனை பேர்? செல்லுமிடம் சென்றவர் எத்தனை பேர்? *இது வரலாற்றின் தீர்ப்பு; வரலாற்றின் போக்கினையறிந்த மாந்தர் தம் தெரிவு.*

"danh ran dam dam ran danh" என்கிற வியட்னாமிய சொற்றொடர் குறிப்பது போரிடுங்கள், பேசுங்கள் பேசுங்கள், போரிடுங்கள் என்பதாகின்றது. வியட்னாமின் போராளிகளிடையே ஒரு காலகட்டத்தில் புழக்கத்திலிருந்த இத் தொடரினை மேலோட்டமாகப் பார்க்கும்பொழுது எளிமையானது. ஆனால் அன்று வியட்னாமில் மிக ஆழமான பொருள் தந்த அரசியல், இராசதந்திர தொடரிது. "*மிகச் சிக்கலான, மதிநுட்பமான, ஒன்றிணைக்கப்பட்ட இராணுவ இராசதந்திர அரசியல் மூலோபாயம் இது.* அமெரிக்காவிலும், தென்வியட்னாமிலும் குழப்பங்களை ஏற்படுத்தி இவ்விரு கூட்டாளிகளிடையே பிளவுகளை தோற்றுவித்து, அமெரிக்காவிலே வியட்னாம் போருக்கெதிரான கடும் எதிர்ப்பு தோன்றவும் காரணமான பெருபாயமிது. "இராசதந்திரம் என்பது இராணுவ வலிமையை பிரயோகத்திற்கு அடுத்த நிலையிலிருந்து மட்டுமன்றி *அதற்கு துணையும் நின்றது.*" "இருதரப்புமே தமக்கு கிட்டிய சகல வழிகளையும் பயன்படுத்தி இராசதந்திரத்தையும் அமைதிப் பேச்சுக்களையும் (1) பரப்புரை வெற்றியை தமதாக்க (2) உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஆதரவை திரட்ட (3) எதிரிதரப்பில் குழப்பங்களை ஏற்படுத்த முழுமையாகப் பயன்படுத்தினர் இவர்களுக்கு *இராசதந்திரமும் இராணுவ வழியைப் போலவே இலக்கை அடையப் பயன்பட்ட இன்னொரு வழியானது.*" இவ்வாறு வியட்னாமிய வரலாற்றினை ஆய்வு செய்தோர் அடித்துக் கூறுகின்றனர்.

போரும் பேச்சுவார்த்தைகளுமாகவே வியட்னாமிய விடுதலை வரலாறு நகர்ந்து முன் சென்றுள்ளது. 18ம், 19ம் நூற்றாண்டுகளில் இந்தோசைனா (லாவோஸ்-வியட்னாம் - கம்போடியா) என பிரான்சு தென்கிழக்காசியாவில் உருவாக்கிய குடியேற்ற வலயத்திற்கெதிராக 1930 களை தொடட்டே *கோ - சி மின்* தலைமையிலான விடுதலையணி போராடி வந்துள்ளது. 2ம் உலகப்போரையடுத்து பிரான்சோடு பேச்சுக்கள் நடத்தியும் பயனளிக்காத நிலையில் பேச்சுவார்த்தைகள் மூலம் பெறமுடியாததை போர் மூலம் பெறுவதற்காக 1946 களில் போரை ஆரம்பித்தார். எட்டு வருட தீவிர ஆயுதப் போராட்டத்தின் பின் 1954 மேயில் தியென்-பின்பூ தள வீழ்ச்சியோடு பிரான்சியரின் ஆதிக்கம் அடங்கியது; எனினும் வியட்னாம் முழுமையாக விடுதலைபெற முடியவில்லை. அதேயாண்டு ஜெனீவாவில் நடைபெற்ற சர்வதேச

## திரு. க. வே. பாலகுமாரன்

மாநாட்டில் வியட்னாம் துண்டாடப்பட்டது. வடவியட்னாம் முழுமையான விடுதலைபெற தென்வியட்னாமில் சில காலம் இருந்து பின் பிரான்சியர் வெளியேற அமெரிக்கர் நுழைந்தனர். தென்வியட்னாமை விடுவிக்க போராடிய தேசிய விடுதலையணி சைகோனை கைப்பற்றும் நிலை உருவாகியபோது அமெரிக்கா நேரடியாக தலையிட்டது. வடவியட்னாம் மீது விமானக்குண்டு வீச்சினை தொடங்கியதோடு தரைப்படையையும் தென் வியட்னாம் அனுப்பியது. இவ்வாறாகத்தான் பெரும்போருக்கான சூழல் அங்கு உருவாகி புகழ்மிக்க விடுதலைமலர் அங்கு பூத்தது.

இந்நிலையிலே தான் இரு முரண்பட்ட தரப்பினரும் *தமது* **இலக்குகளை** இவ்வாறு வரையறுத்துக் கூறினர். 1965ம் ஆண்டு ஏப்ரல் 07ம் திகதி அன்றைய அமெரிக்க சனாதிபதி லிண்டன் ஜோன்சன் கூறினார் (அ) தென் வியட்னாமின் சுதந்திரம் எப்போதும் பாதுகாக்கப்படும் (ஆ) நேரடியாக மோதியோ அல்லது பேச்சுவார்த்தை போர்வையிலோ அமெரிக்கப்படையை மீளப்பெறச்செய்ய எவராலும் முடியாது. இதேவேளை *அமைதிக்கதவை மூடவில்லை நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளுக்கு நாம் தயார்.* இதற்கு மறுநாள் வடவியட்னாம் பிரதமமந்திரி பாம் பான்டொங் தமது நிலைப்பாட்டை இவ்வாறு வெளிப்படுத்தினார். (அ) போரை உடன் நிறுத்தி அமெரிக்கப்படைகள் உடன் வெளியேற வேண்டும் (ஆ) வெளியார் தலையீடின்றி வியட்னாமிய தேசிய விடுதலை முன்னணியின் முடிவிற்கேற்ப வியட்னாம் ஒன்றிணைய வேண்டும். இவ்வாறாக இரு தரப்பு நிலைப்பாடுகளும் வரையறுக்கப்பட்டபின் இவற்றினையடைய முயற்சிகள் தொடங்கின. இவ்வாறாக உலகின் புகழ்மிக்க போராட்ட வரலாறு தொடங்கியது.

எமது வசதிக்காக வியட்னாமிய விடுதலை வரலாற்றினை மூன்று கட்டங்களாக வகுத்துக்கொள்ளலாம். முதற்காலகட்டம் 1965 - 1967 க்கு இடைப்பட்டது. மிகத்தீவிரமாக இரு தரப்பிற்கும் போர் நடைபெற்றகாலம். எனினும் போப்பாண்டவர், ஐநாச்செயலர், வேறும் பல நாடுகளும் அமைதி முயற்சிகளை மேற்கொண்டன. பேச்சுக்கு தாம் தயார் எனக்கூறி அமெரிக்கா குண்டு வீச்சுக்களை இடைக்கிடை இடைநிறுத்தி பாவனை செய்தபோதும் பேச்சுவார்த்தைகளை *குழப்பும் வகையில்* செயற்பட்டது. அதேவேளை *நிபந்தனையுடன் கூடிய பேச்சுக்களுக்கு* (குண்டு வீச்சுக்களை நிறுத்தல்) தாமும் தயாரென வடவியட்னாமும் கூறிக்கொண்டது. உண்மையில் *இரு தரப்புமே பேச்சுவார்த்தைகளுக்கு தயாராகவில்லை.* இக்கட்டத்தினை "இராசதந்திர நிழல் மல்யுத்த காலம்" என்றும் "அமெரிக்க இராசதந்திர வரலாற்றின் பயனற்ற பக்கங்கள்" எனவும் வரலாற்றாளர் விபரிக்கின்றனர்.



இதற்கடுத்த இரண்டாம் காலகட்டம் ஆழ்ந்த கவனிப்பிற்குரியது. 1968ம் ஆண்டு சனவரியின் இறுதியில் பாரிய தாக்குதலை வியட்னாமிய விடுதலையணி கொடுத்தது. ரெற் தாக்குதல் (Tet Offensive) என அழைக்கப்பட்ட இத்தாக்குதல் தென் வியட்னாம் எங்கும் பரவலாக நிகழ்த்தப்பட்டது. இத்தாக்குதல் பாரிய

( 11 ம் பக்கம் பார்க்க )